# பொறுமையோடு முன்னேறுங்கள்

**2 தீமோத்தேயு 3:17**

**அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர் திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**

ஒரு ஊரிலே கணித பாடத்தை நன்றாக கற்றுக் கொடுக்கும் ஆசிரியரொருவர் இருந்தார். அவர் கற்பிக்கும் வகுப்பிலே தவறாமல் சென்று கற்றுக் கொண்ட மாணவர்களில் அநேகமானோர் விசேஷட சித்தி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. வகுப்பு நடக்கும் நேரங்களிலே, மாணவர்கள் தம் முழுக் கவனத்தையும் படிப்பதில் செலுத்த வேண்டும் என்பதில் அவர் மிகவும் உறுதியுள்ளவராக இருந்து வந்தார். குறிப்பிட்ட ஆண்டொன்றிலே, அவரிடம் கணிதம் படிக்க வந்த மாணவனொருவன், படிப்பதில் கவனமற்றவனாக இருப்பதை கண்ட அந்த ஆசிரியர், அவனுடைய குறையை அதிகாரத்தோடு சுட்டிக்காட்டி, அவனை கடிந்து கொண்டார். அதனால், கோபமடைந்த அந்த மாணவன், இவருடைய வகுப்புக்கு நான் இனி சமுகமளிக்கப் போவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டான். அதை அறிந்து கொண்ட அவனுடைய நண்பனானவன், அந்த மாணவனை நோக்கி: நண்பா, அந்த ஆசிரியர், உன்னைக் குறித்து கூறிய வார்த்தைகள் உண்மையுள்ளவைகள் என்பதையும், உன் எதிர்காலத்தின் நன்மைக்கு உகந்தது என்பதையும் நீ நன்றாக அறிந்திருக்கின்றாய். கற்றுக் கொடுப்பதிலே கடிந்து கொள்ளுதலும் உண்டு. எனவே நீ அவருடைய பேச்சின் தொனியினாலே சோர்ந்து போகாமல் அவருடைய நல் ஆலோசனை களை கேட்டு அதன்படி நடந்து கொள். முடிவு நன்மையாக இருக்கும். இதே ஆசிரியரிடம் கணித பாடத்தை கற்று, அதிவிசேஷட சித்தி பெற்ற என் மூத்த சகோதரன், இந்த ஆசிரியரை குறித்து எனக்கு கூறிய அறிவுரை இதுவே என்றான். ஆம் பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் மேய்ப்பர்களினதும், மூப்பர்களினதும், பேச்சுத் தொனியைக் குறித்து அதிகமாக நொந்து கொள்கின்றீர்களா? அல்லது சொல்லப்பட்ட வார்த்தைகளின் கருப்பொருளை கவனத்திற் கெடுத்துக் கொள்கின்றீர்களா? நம்முடைய ஆண்டவராகிய இயேசு அன்புடன் சத்தியத்தை பேசினார். சில இடங்களிலே தாம் அதிகமாக நேசித்த சீஷர்களையும் கடிந்து கொண்டார். தேவனுடைய வார்த்தை பேசப்படும்போது, சொல்லப்பட்ட காரியத்தில் உண்மையிருந்தால், அதன்படி திருந்திக் கொள்வதே உங்களுக்கு நலமானதாக இருக்கும். தயவான முகஸ்துதியைவிட, உண்மையான கடிந்து கொள் ளுதல் நல்லது. கடிந்து கொள்ளுதல் தற்போது கசப்பாக இருந்தாலும், முடிவிலே அவை இனிப்பானதான பலனையே கொடுக்கும்.

**ஜெபம்:** அன்பின் பரம தந்தையே, வெளிப்படையான கடிந்துகொள்ளுதலை கேட்டு நான் சோர்ந்து பின்னிட்டு போகாதபடிக்கு, என்னைத் தாழ்த்தி என் வழிகளை சீர்செய்து கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச்செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நண்பனின் கடிந்து கொள்ளுதல்

**நீதிமொழிகள் 27:5**

**சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்**

ரபீ, நீர் வாழ்க என்று சொல்லி, யூதாஸ்காரியோத் ஆண்டவர் இயேசுவை முத்தஞ்செய்தான். சற்று இந்த வசனத்தை சிந்தித்துப் பாருங்கள், யூதாஸ்: “போதகரே” என்று மிகவும் கனத்தோடு இயேசுவை அழைத் தான். யூத மார்க்கத்தின் பிரதான ஆசாரியர், ஜனத்தின் மூப்பர்கள், போர் சேவகர் முன்னினையில், அவன் அஞ்சாமல் இயேசுவை போதகரே என்று அழைத்தான். ஏன் அவன் அஞ்சவில்லை? ஏனெனில் நான் எவனை முத்தஞ்செய் வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று பிரதான ஆசாரியர், ஜனத்தின் மூப்பர் களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். எனவே வஞ்சகமான முகஸ் துதியோடு, தன்னுடைய தீயசிந்தையை நிறைவேற்றும்படிக்கு இருதயத்திலே திருட்டுதனமுள்ள யூதாஸ் தன் எஜமானனாயிருந்த இயேசுவை முத்தம் செய்தான். இதை எதிரியின் முத்தம் என்று வேதாகமம் கூறுகின்றது. இன்னுமொரு சமயத்திலே ஆண்டவராகிய இயேசு தன் சிரேஷ்ட சீஷனாகிய பேதுருவை மிகவும் கடுமையாக கடிந்து கொண்டார். ஏன் அப்படி கடிந்து கொண்டார்? தான் அன்பு செய்கின்ற சீஷனானவன், பிதாவினுடைய சித்தத்திற்கு எதிராக சிந்திக்கின்றான். அது அவனுக்கு நல்லதல்ல என்பதை கற்றுக்கொடுக்கும்படியாகவே அவர் அப்படி செய்தார் (மத்தேயு 16:23). இது ஒரு நண்பனுடைய கடிந்து கொள்ளுதல். ஆனாலும், அவனுடைய இக்கட்டான நேரத்திலே, பிசாசின் சோதனையிலே அவன் விழுந்து போகாதடிக்கு அவனுக்காக வேண்டுதல் செய்தார். (லூக்கா 22:31-32). இன்று சில விசுவாசிகளும்கூட எதிரியின் முகஸ்துதியையே விரும்புகின்றார்கள். அதாவது, அன்பாக இருக்க வேண்டும் என்ற போர்வையிலே தவறான வழியிலே தன் வாழ்க்கை அழித்துக் கொண்டிருப்பவர்களை அவர்களுடைய பாவத்திலே வாழும்படிக்கு விட்டுவிடுகின்றார்கள். ஆனால், அவர்கள் அழிந்து போகக்கூடாது என்ற எண்ணத்துடன், அவர்களுடைய தவறை சுட்டிக்காட்டும், மேய்ப்பர்கள், மூப்பர்களையோ அவர்கள் பகைக்கின்றார்கள். பிரியமானவர்களே, நண்பனுடைய வார்த்தைகள் இருதயத்தைக்குத்தினாலும் அவை உண்மையானவைகள். நன்மைக்கேதுவானவைகள். ஆனால் சத்துரு இடும் முத்தம் வஞ்சனையுள்ளவைகள். (நீதி 27:6). பிதாவினிடத்திலே உண்மையான அரவணைப்பு உண்டு. அதனால் கடிந்து கொள்ளுதல் அவரிடம் இல்லை என்று எண்ணங் கொள்ளாதிருங்கள். உங்கள் நன்மை கருதி நீங்கள் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்து போகாதிருங்கள்.

**ஜெபம்**: அன்புள்ள பரலோக பிதாவே, நான் முகஸ்துதி செய்யாமலும், முகஸ்துதியை விரும்பாமலும், உம்முடைய வார்த்தையின்படி என் வழிகளை மாற்றும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதியை நிறைவேற்றுங்கள்

ஒரு தகப்பனானவன், தான் வேலை செய்யும் இடத்திலே, தன்னுடைய இயக்குனர், தனக்கெதிராக பேசும் அநியாயமான வார்த்தைகளை கேட்டு மனவருத்தமடைந்தான். அந்த கடும் வார்த்தைகள் அநீதியானதாக இருந்தபோதும், மகளுடைய திருமண நாள் நெருங்கிங் கொண்டிருக்கின்றது. இளைய மகனானவன் உயர்தரத்திலே கல்வி கற்கின்றான். எனவே, நான் அவமானப்பட வேண்டி நேர்ந்தாலும், என் குடும்பத்தின் நலனுக்காக இன்னும் கொஞ்ச காலம் பொறுமையாக இருப்பேன். தேவனானவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றார் என்று தன் மனதை தேற்றிக் கொண்டான். தன் குடும்பத்தின் இலக்கு, இலட்சியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக, அநீதியான இடத்தில், நீதியாக தன் வேலைகளை சகிப்புத்தன்மையோடு அந்த தகப்பனானவர் செய்து வந்தார். நம்முடைய வாழ்வின் மேலான இலக்கு என்ன? நாம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். அந்த உன்னதமான இலக்கை நோக்கி செல்லும் பாதையிலே உபத்திரவங்கள் உண்டு. உபத்திரவங்களை எதிர்நோக்கும் போது, மனத்தெளிவுள்ளவனாயிருந்து, ஆண்டவர் இயேசுவைப்போல, பெற்ற பொறுப்பை, பிதாவின் சித்தப்படி நிறைவேற்றி முடிக்கும்வரை, தேவனுக்கு சித்தமானால், நாம் நன்மை செய்து தீங்கநுபவிக்க கற்றுக் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்ட, அந்த அன்புள்ள தகப்பனானவர் இன்னும் கொஞ்சக் காலம் அநீதியை சகித்துக் கொள்ள தீர்மானம் செய்தார். அதுபோல, மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை அடையும்படிக்கு, தற்போது நாம் எதிர்நோக்கும் அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவத்தை கிறிஸ்துவுக்காக சகித்துக் கொள்ள வேண்டும். அதி உன்னதமாக கன மகிமை உண்டு என்று விசுவாசிக்கின்ற நமக்கு, ஏன் வீட்டிலும், சபையிலும், சமுகத்திலும் உண்டாகும் உபத்திரவங்களை சகித்துக் கொள்ள முடியாமலிருக்கின்றது? நாம் முற்றிலும் தேறிவிட்டோமா? நாம் மற்றவர்களுக்கு எந்த உபத்திரவமும் செய்யாத குற்றமற்ற மனிதர்களா? அவிசுவாசிகளாகிய உறவினர் நண்பர்கள் முன்னிலையிலே சகவிசுவாசிகளை குறித்து வழக்காடுவது நியாயமாக தோன்றுகின்றதா? அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? எனவே வஞ்சிக்கப்படாதிருங்கள். நாம் அநியாயத்தின் மத்தியிலும் தேவநீதியை நிறைவேற்றுகின்றவர்களாகவே வாழக்கடவோம்.

**1 கொரிந்தியர் 6:7**

**நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை?**

**ஜெபம்:** என் குறைவுகளை நிறைவாக்கும் தேவனே, நான் தீமைக்கு தீமை சரிக்கட்டுவேன் என்று வாழாமல், கிறிஸ்து இயேசுவின் சிந்தைதை தரித்து தேவ சித்தத்திற்கு இடங் கொடுக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தனிமைப்படுத்தப்படும் நேரங்கள்

முன்னைய நூற்றாண்டுகளிலே நடந்த கொள்ளை நோயைப் பற்றியும் அதன் தாக்கத்தைப் பற்றியும் முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கி ன்றோம். ஆனால் கடந்த ஆண்டுகளிலே கொள்ளை நோய் எப்படியாக ஆரம்பித்து, உலககெங்கும் பரவி, கொடிய தாக்கத்தை ஏற்படுத்தியதை நாம் யாவரும் இப்போது அனுபவரீதியாக அறிந்திருக்கின்றோம். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே, தொழுநோயானது மிகவும் கொடிய தொற்று நோயாக இருந்து வந்தது. அப்படிப்ப ட்டநோயுள்ளவர்களை, ஜனங்கள் இல் லாத இடத்தில் எப்படி தனிப்படுத்த வேண்டும் என்பதைக் குறித்த ஒழுங்கு முறைகளை லேவியராகமம் 13ம் அதிக ாரத்தில் வாசிக்கலாம். நாம் அன்பு செய் கின்ற குடும்ப அங்கத்தி னரை எப்படி தள்ளிவிடுவது என்பதை சிந்திக்கும் போது, அதை ஜீரணிப்பதற்கு கடின மாக இருக்கின்றதல்லவா? எனினும், கொள்ளை நோய் கிருமி தாக்கிய குடும்ப அங்கத்தினர்களை நாம் தனி மைப்படுத்த வேண்டிய அவசியத்தை அனுபவ ரீதியாக கற்றுக் கொண் டோம். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதால், அவர்களை முற்றிலும் கைவிட்டுவிட்டார்கள் என்பது பொருள் அல்ல. வைத்தியர்களும், தாதி யர்களும், இன்னும் அநேக தொண்டர்களும் அவர்களுக்காக அயராது உழை த்தார்கள். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும், அன்பு மையப் பொருளாக இருக்கின்றது என்பதில் ஐயமேதுமில்லை. ஆனால், நம்முடைய உடன் சகோதரர்களிலும் சிலரை தனிமைப்படுத்துமாறு தேவ வார்த்தை வழியாக நமக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டிருக்கின்றது. எடுத்துக் காட்டாக, வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண் டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு (தீத்து 3:10). இது நமக்கு கொடுக்கப்பட்ட தேவ ஆலோசனை. அதன்படி நம் ஆவி க்குரிய வாழ்க்கையை நாம் காத்துக் கொள்ள வேண்டும். ஆனால், புற ம்பே தள்ளிவிடப்பட்ட வேதப்புரட்டனாகிய அவனுடைய காரியம் என்ன? தேவன் அவனை முற்றிலும் கைவிட்டாரா? ஒருவரும் கெட்டுப்போகா மல் எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, அவர் யாவர்மே லும் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். அப்படி மனந்திரும்புகின் றவனை தேவன் மறுபடியும் தம்மிடம் சேர்த்துக் கொள்ள தயவு பெருத் தவராகியருக்கின்றார். ஆனால், நாமோ தேவ எச்சரிப்பை ஏற்றுக் கொண்டு, மாசற்றவர்களாக தேவனுக்கு முன் நம்மை நிறுத்திக்கொள்வதற்கு நம் முடைய பரிசுத்த வாழ்வை காத்துக் கொள்ள வேண்டும்.

**எபேசியர் 5:27**

**கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக**

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழ நம்மை வேறு பிரித்த தேவனே, கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றவனுமாக நான் மாறும்படிக்கு என்னை நீர் நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பை அறிந்து கொள்ளுங்கள்

ஒரு வீட்டிலே, யாவரும் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையிலே, மின் சார கசிவு காரணமாக, தீடிரென ஏற்பட்ட தீயானது, சீக்கிரமாக பற்றி யெரிய ஆரம்பித்தது. வீட்டிலே இருந்தவர்கள் யாவரும் தாமதமின்றி வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தீயணைப்பு படையினரும் தீவிரமாக அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வயது சென்ற தன்னுடைய தந்தையார், இன்னும் வீட்டைவிட்டு வெளியறேவில்லை என்று அறிந்து கொண்டவீட்டின் சொந்தக்காரன், மிக வும் பதற்றமடைந்து, என் தந்தையை எப்படியாவது நான் காப்பாற்றுவேன் என்று வீட்டிற்குள் செல்ல தீவிரித்த போது, தீயணைப்பு படையின் அதி காரி அவனை இடைநிறுத்தி, அவனை நோக்கி: நீ உள்ளே போகமுடியாது, தீ பல இடங்களுக்கு பரவி விட்ட தால், உனக்கு உயிராபத்து நேரி டலாம். நாங்களோ, இதற்கென பயிற்சி பெற்று, அதற்குரிய பாதுகாப் பான சீருடையகளை அணிந்திருக்கி ன்றோம். இது எங்களுடைய அழைப்பு. நீ இங்கே உன் மனைவி பிள்ளைகளுடன் நின்றுகொள், எங் களுடைய வீரர்கள் உள்ளே சென்று, உன் தந்தையை காப்பாற்றுவார் கள் என்று கூறினார். பிரியமானவர்களே, தன் தந்தைக்கு உயிராபத்து ஏற்படுமோ என்ற கவலை மகனானவனை வாட்டியது. ஆனால் அந்த மக னானவனைவிட தீயிலிருந்து உயிரை பாதுகாப்பதற்காக பயிற்சி பெற் றவர்கள் இருக்கின்றார்கள். அதுபோலவே, இந்த உலகத்திலே வாழும் நாம், நாம் பெற்ற மீட்பை நம் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் யாவ ரும் பெறவேண்டும் என்னும் பாரம் நம் மனதிலே உண்டாகின்றது. அந்த எண்ணம் நன்மையானது. ஆனால், சில வேளைகளிலே அவர்கள் இருக்கும் பொல்லாப்பான சூழ்நிலைக்குள் செல்வதற்கு, நான் அழை ப்பை பெற்றிருக்கின்றேனா என்று ஒவ்வொருவரும் தன்னைத் தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த காரணத்திற்காகவும் அல்லது எந்த காரியத்திற்காகவும் நாம் பெற்ற இரட்சிப்பை நாம் பணயம் வைத்து செயற்படுவது மதியீனமான காரியம். நாம் செய்ய முடியாத காரியங் களை நடப்பிப்பதற்கும், நாம் செல்ல முடியாத இடங்களுக்கு சென்று வருவதற்கும், அந்த தீயணைப்பு படையினரைப் போல பிரத் தியேக அழைப்பைப பெற்ற தேவ ஊழியர்கள் இருக்கின்றார்கள். எனவே, நாம் தேவ சித்தம் நிறைவேறும்படி தேவனுடைய பாதத்திலே பொறுமையு டன தரித்திருந்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**ரோமர் 12:3**

**அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, எனக்கு அருளப்பட்ட கிருபையின்படியே, என்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், தெளிந்த எண்ணமுள்ளவனாயிருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மற்றவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும்

ஐயா, போதகர் அவர்களே, முற்காலங்களிலே நானும் என் நண்பர்களோடும் உறவுகளோடும் சேர்ந்து அவர்களைப் போல உணர்வற்றவனாக அறியாமையிலே வாழ்ந்து வந்தேன். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் என்னில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களனாயிருந்த என்னை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். அவருடைய கிருபையினாலே இரட்சிப்படைந்தேன். இப்போது நான் எப்படி என் பழைய நண்பர்களையும், உறவினர்களையும் மறந்து போவது. அவர்களுக்கும் இரட்சிப்பின் நற்செய்தியை நான் அறிவிக்க வேண்டுமல்லவா என்று தன் பழைய நண்பர்களோடும் உறவுகளோடும்போக்கும் வரத்துமாக இருந்த ஒரு மனிதனானவன் தன் போதகரிடம் கூறினான். போதகர் அவனை நோக்கி: மகனே, நீ கூறியதில் சத்தியம் இருக்கின்றது. நாம் பெற்ற இரட்சிப்பை நம்முடைய குடும்பங்கள், உறவுகள், நண்பர்கள் யாவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். அவர்களுடை கடினமான உள்ளம் உடைக்கப்பட வேண்டும் என்பதற்காய் நாம் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். இவையொன்றிலும் வேற்றுமையான கருத்து இல்லை. ஆனால் சில காரியங்களை நீ கவனமாக கேட்டுக் கொள். நீ உன் நண்பர்களையும், உறவுகளையும் நேசிப்பதைவிட, ஆண்டவராகிய இயேசு அவர்களை அதிமாக நேசிக்கின்றார். அவர்களுடைய நிலைமையை அவர் ஒருவரே நன்றாக அறிந்திருக்கின்றார். அவர் யாரை? எப்போது? எங்கே அனுப்ப வேண்டும் என்பதில் என்னையும் உன்மையும்விட அதிக கரிசணையுள்ளவராக இருக்கின்றார் என்பதையும் இரட்சிப்பு தேவனுடைய கிருபையினாலே உண்டாகின்றதென்பதையம் நீ ஒருபோதும் மறந்துவிடாதே. உன் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள். புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும் பிறப்பிக்கும் இடங்களையும் ஐக்கியங்களையும் தவிர்த்துக் கொள். பெற்ற இரட்சிப்பை அசட்டை பண்ணாதே. ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தை கெடுக்கும். நீ அவர்களின் இரட்சிப்புக்காக அவர்களோடு அதிக நேரத்தை செலவழிப்பதைவிட, அவர்களுக்காக, தேவனோடு ஜெபத்திலே அதிக நேரத்தை செலவிடு அப்போது நீ புத்திமானாய் நடந்து கொள்வாய் என்று ஆலோசனை கூறினார்.

**எபேசியர் 2:8**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;**

**ஜெபம்:** இரட்சிப்பின் தேவனே, அற்பமான என்னை பரிசுத்த வாழ்வு வாழும்படி வேறுபிரித்ததற்காய் நன்றி. நான் எப்போதும் உம்முடைய சித்தம் செய்பவனாக வாழ எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய வழிகள் அதிசயமானவைகள்

மாலை வேளையிலே, முற்றத்திலே ஓடி விளையாடும் தன்னுடைய ஐந்து பிள்ளைகளை பார்த்துக் கொண்டு, வீட்டும் தோட்டத்திலே சில வேலைகளை செய்து கொண்டிருந்த ஒரு தகப்பனானவர், தன் பிள்ளை களிலொருவன், தூஷணமான வார்த்தைப் பிரயோகம் செய்ததை கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார். இவனும் என்னுடைய பிள்ளைகளி லொருவனல்லவா? நாங்கள் வீட்டிலே ஒருபோதும் உபயோகிக்காத ஆகாத அந்த வார்த்தையை எங்கே கற்றுக் கொண்டான் என்று மனவே தனையடைந்தார். அவனை கூப்பிட்டு, கண்டித்து, இந்த கிழமை முழு வதும் உனக்கு விளையாட்டு இல்லை. தோட்டத்திலே இருக்கின்ற இந்த சின்ன வேலைகளை வந்து செய் என்று கட்டளை கொடுத்தார். அவனு டையசகோதரரி லொருவன், அவனை மன்னித்து விட்டுவிடுங்கள். அவனை ஏன் இப்படியாக எங்ளைவிட்டு தள்ளி விடுகின்றீர்கள் என்று தகப்பனிடம் கெஞ்சிக் கேட்டான். ஆனால், தன் பிள் ளைகளை உண்மையாக நேசித்து வந்த தகப்பனானவர், குற்றம் செய்த அந்த பிள்ளையானவன், சில நாட்கள் இப்படியாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து. தோட்டத்திலே வேலை செய்யும் போது, அவ னோடு அதிக நேரத்தை செலவழித்தார். அவனுக்கு புத் தியை தெளிவிக்கும் பல காரியங்களை அனுவபங்கள் வழியாக கற்பி த்துக்கொடுத்தார். பிரியமானவர்களே, சில வேளைகளிலே நமக்கு அன் பானவர்கள், குடும்பத்தைவிட்டு, சபையைவிட்டு, ஊரைவிட்டு சில காலம் விலக்கப்படுகின்றார்கள். அவற்றுள் சில உங்கள் பார்வைக்கு நீதி யாகவும், வேறுசில அநீதியாகவும் தோன்றலாம். அவைகளினாலே, உங் கள் மத்தியிலே இன்னும் அதிக குழப்பங்களை ஏற்படுத்தி விடாதிரு ங்கள். அன்பு மிகுந்த ஆண்டவர் இயேசுவானவர், பல மனிதர்களை, பற்பல இடங்களிலே சந்தித்ததை நாம் அனுபவ சாட்சி வழியாக கேட்டி ருக்கின்றோம். கடும் நோயினால் வாதிக்கப்பட்ட சிலரை வைத்திய சாலையிலும், கடும் தண்டனையை பெற்ற சமுகத்தைவிட்டு அகற்ற ப்பட்டவர்களை சிறைச்சாலையிலும், பராமரிப்பு நிலையங்களிலும், தங்க இடமின்றி தெருத்தெருவாக அலையும் சிலரை தெருவிலும் சந் தித்தார். அவர்களுடைய இருதயங்கள் தொடப்பட்டு, மனக்கண்கள் திற க்கப்பட்டு, தங்களை படைத்த தேவனாகிய கர்த்தர் யார் என்பதை அவ ர்கள் அறிந்து கொண்டார்கள். நம்முடைய தேவனனுடைய வழிகள் அதி சயமானவைகள். அவருடைய சித்தம் நிறைவேற இடங் கொடுங்கள்.

**பிரசங்கி 11:5**

எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்

**ஜெபம்:** உங்கள் வழிகள் என் வழிகள் அல்லவென்று கூறிய தேவா னாகிய கர்த்தாவே, உம்முடைய வழிகளுக்கு நான் எதிர்த்து நிற்காதப டிக்கு, பொறுமையுள்ளனாக உம்மை வார்த்தையிலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மை உண்டாகும்படி காத்திரு

தன் தந்தையானவர் வீட்டிலே செல்லப் பிள்ளையாக வாழ்ந்து வந்த மகனானவன், இப்போது பன்றிகள் மத்தியிலே, உண்ண ஆகாரமற் ற வற்வனாக இருந்தான். பன்றிகள் உண்ணும் தவிட்டைக் கூட அவனுக்கு ஒருவனும் கொடுக்கவில்லை. இந்த நிலைமைக்கு காரணம் யார்? அவன் பெற்றோரா? சகோதர்களா? வீட்டு வேலைக்காரரா? அவன் தன் மனவி ருப்பங்களை நிறைவேற்ற வீட்டிலே அனுமதி அவனுக்கு கிடைக்கவி ல்லை. தன் போக்கில் வாழ அவனது தந்தை வீட்டில் அவனுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. எனவே அவன் தன் இஷ்டப்படி வாழ்வதற்காக தந்தை வீட்டைவிட்டு வெளியேறினான். தன் மாம்ச ஆசை இச்சைகளைநிறைவேற்றி, துன்மார்க்க வழிகளிலே சுகபோகமாக வாழ்ந்தவனுக்கு இப் போது நண்பர்களோ, உறவினர்களோ, அவனோடிருந்த விபசாரிகளோ அவனோடு இல்லை. சமுகத்தை விட்டு புறம்பாக்க பட்டு, பன்றிகள் மத்தியிலே பட்டினியோடு வாழும் போதே அவனுடைய புத்தி தெளிந்தது. தன் தந்தையிடம் திரும்பிச் செல்ல தீர்மானித்தான். இது அவன் தந்தையுடைய தன் செல்லப் பிள்ளையைக் குறித்த பூரணமான திட்டமா? இல்லை. இது அவன் தெரிந்து கொண்ட வழி. எனினும், தந்தையானவர், அவன் புத்தி தெளிந்து வீடு திரும்பும் நாளையொட்டி, தன் இதயக் கதவை திறந்து வைத்திருந்தார். பிரியமானவர்களே, இவ்வண்ணமாகவே, சில தேவ அழைப்பை பெற்ற பிள்ளைகள் கூட, தங்கள் சொந்த இலக்குகளை நிறைவேற்றும்படி, தங்களைத் தாங்கள் குடும்பத்தைவிட்டு, சபையை விட்டு, தேவனைவிட்டு புறம்பாக்கும்படி தங்கள் பார்வைக்கு நன்மையாக தோன்றும் வழிகளை உண்டு பண்ணு கின்றார்கள். தங்கள் வழிகளை நியாயப்படுத்த பல காரணங்களையும் சுட்டிக் காட்டிக் கொள்வார்கள். உண்மை தெளிவாகும் நாள் ஒன்று உண்டு. வெளிப்படாமல் மறைந்திருப்பவைகள் ஒன்றுமில்லை. உண்மை என்ன என்பது தெளிவாகுவதை விட, அவர்கள் புத்தி தெளிந்து, மனம்திரும்பி, தேவனண்டையிலே மறுபடியும் கிட்டிச் சேர்ந்து, அவருடைய வழியிலே வாழ்வதே அதிக மேன்மையானது. எனவே, சிலர் வெவ்வேறு காரணங்களுக்காக தங்களைத் தாங்களே புறம்பாக்கிக் கொள்கின்றார்கள். அவ ர்கள் நிமித்தம் நீங்கள் உங்கள் வீட்டிலோ, சபையிலோ கலகக்காரராக மாறாதபடிக்கு, தேவ சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேறு ம்படிக்கு நம்பிக்கையோடு காத்திருங்கள்.

**சங்கீதம் 37:5**

**உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்**

**ஜெபம்:** உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணும் தேவனே, நான் எப்போதும் உம்மை நம்பி உம்முடைய வழியில் செல்ல கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதிக்காக பிரயாசப்படுங்கள்

அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பது தவறா? சபையிலே சங்கத்திலே அநியாயங்கள் ஏற்படும்போது மௌனமாக இருப்பது சரியாகுமா? என்று ஒரு வாலிபனானவன் தன் மேய்ப்பரிடம் கேட்டுக் கொண்டான். அதற்கு அந்த மேய்ப்பரானவர்: அநீதியையும் அநியாயத்தையும் காணும் போது, நீ ஒருபோதும் பாராமுகமாக மௌனமாக இருக்கக்கூடாது. நீ அவைகளை எதிர்த்துக் போராட வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனால், நம்முடைய போராட்டம் எப்படிப்பட்டது என்றும், இதற்கு நாம் உபயோகிக்கும் போராயுதங்கள் இன்னதென்பதையும் குறித்து மிகவும் தெளிவாக வகையறுத்துக் கூறுகின்றது. உன் அயலிலே வாழும் மனிதனானவனொருவன், மதுபான வெறிகொண்டு, தெருவின் நடுச் சந்தியிலே நின்று, கையிலே கத்தியை வைத்துக் கொண்டு, கலகத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தால் நீ என்ன செய்வது நீதியாக இருக்கும் என்று அந்த வாலிபனானவனைக் கேட்டார். பொலிசாருக்கு அழைப்பு கொடுப்பேன் என்று தாமதமின்றி அவன் பதில் கூறினான். அந்த பொலிசார் நீ நினைத்தபடி சரியான நடவடிக்கையை எடுக்காவிட்டால் என் செய்வாய் என்று அந்த மேய்ப்பனானவர் கேட்டார். அதற்கு அந்த வாலிபனானவன், அவர்களை பார்த்துக் கொள்வதற்கும் அதிகாரங்கள் நியமிக்கப்பட்டடிருக்கின்றது என்று கூறினான். ஆம், மகனே, அந்த அதிகாரங்களும் ஒருவேளை தவறினாலும், மேலான அதிகாரமுள்ளவராகிய தேவனாகிய கர்த்தர் யாவற்றையும் அறிந்திருக்கின்றார். அவருடைய நீதிக்கு ஒருவரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அதுபோலவே சபையிலும் தேவநீதி நிறைவேற இடங்கொடு. நீயோ, மனத்தாழ்மையை அணிந்து கொண்டு, கீழ்படிவுள்ளவனாக இருந்து தேவனுடைய காரியங்களை கற்றுக் கொண்டு, உன்னைக் குறித்ததான காலம் நிறைவேறும்வரை அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருப்பதே தேவ நீதியாக இருக்கின்றது என்றார். (1 பேதுரு 5:5-7). பிரியமானவ ர்களே நம்மைக் குறித்து பிதாவினுடைய சித்தமானது நம்மில் நிறை வேற நாம் இடங்கொடுப்தே தேவ நீதியாக இருக்கின்றது. தேவ நீதியை நிறைவேற்றும் பாதையிலே துன்பங்களை சகித்துக் கொள்ள வேண்டும். அப்படி நாம் செய்யும் போது நாம் பாக்கியவான்களாக இருப்போம். மனந்திரும்பாமல், அநியாயத்திலே நிலைநிற்கின்றவன் அதற்குரிய தண்டனையை நிச்சயமாக அடைவான்.

**மத்தேயு 5:10**

**நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

**ஜெபம்:** நீதியின் தேவனே, என்னுடைய சுய அறிவின்படி அநீதிக்கு எதிர்த்து நிற்காமல், உம்முடைய வார்த்தையின்படி தேவ நீதி என்னில் நிறைவேற நான் இடங்கொடுக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபைபொருந்தினவராயிருங்கள்

தேவனுடைய ராஜ்யத்திலே அநீதிக்கும் அநியாயத்திற்கும் இடமில்லை. நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரமாயிருக்கின்றது. யோவான்ஸநானன் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி,சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்என்றார். அவருடைய வார்த் தையை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட அநியாயக்காரர்,பறிகாரர், பாவிகள் தங்கள் வழிகளை விட்டுவிலகி, தேவ நீதியை பின்பற்றினார்கள். ஆனால், தேவ நீதியை நடப்பிப்பதற்கு எதிராக நின்ற சிறப்பு குடிமக்களாகிய பரிசேயர், சதுசேயர், மதத்தலைவர்களில் பலரை ஆண்டவராகிய இயேசு தாமே வெளியரங்கமாக கண்டித்துப் பேசி, அவர்களுடைய வழிகளை எதிர்த்து நின்றார். மத்தேயு 23ம் அதிகாரத்திலே அதை நாம் வாசிக்கலாம். அவர் நடந்து கொண்டது போல நாமும் நடந்து கொள்ளலாமா? அவர் பேசியது போல நாமும் பேசலாமா? அவர் நடந்து கொண்டது போல நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையே நம்முடைய ஆண்டவராகிய இயேசு விரும்புகின்றார். அவர் சத்தியத்தை சத்தியமாக பேசினார். பாவங்களை சுட்டிக்காட்டினார். ஆனாலும், அவர்களுடைய பாவங்களையெல்லாம் தம்மேல் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்காகவும் தம்மை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். மீட்பராகிய இயேசு, சிலுவையிலே மரிக்கும் தருவாயிலும், பிதாவே, இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் இவர்களை மன்னியும் என்று பரிந்து பேசினார். இதன் வழியாக அவர் பாவிகளும், துரோகிகளும், துன்மார்கரும், அழிந்து போகாமல் நித்திய ஜீவனை அடைந்து கொள்ள வேண்டும் என்று தம்முடைய அன்பை வெளிக்காட்டினார். அவர் அன்புடன் சத்தியத்தைப் பேசினார். நாமும் மற்றவர்களை கடிந்து கொள்ளும் போது, நம்முடைய மனநிலை ஆண்டவர் இயேசுவைப் போல மாற வேண்டும். நம்முடைய கோபத்தையும், எரிச்சலையும் நிறைவேற்ற மற்றவர்களை கடிந்து கொள்ளாமல், அவர்கள் தேவனுடைய வழியை பின்பற்ற வேண்டும் என்ற உண்மையான அன்புடன் அவர்களை சத்தியத்திற்குள் நடத்த வேண்டும். மற்றவர்களுடைய நன்மைக்காக, கிறிஸ்துவைப் போல நஷ்டத்தை நாம் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர் நீதியும் நியாயமுமுள்ளவராக இருந்தும், யாவர்மேலும் தம்முடைய கிருபையைப் பொழிந்து தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையுள்ளவராக இருக்கின்றார்.

**சங்கீதம் 89:14**

**கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.**

**ஜெபம்**: கிருபையும் நீதியுமுள்ள தேவனே, நான் நீதியை பேசும் போது, தம்மைப் பலியாக சிலுவையிலே ஒப்புக் கொடுத்த ஆண்டவர் இயேசுவைப் போல கிருபை பொருந்தினவனாக இருக்க என்னை மாற்றுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய பிரதானமான நோக்கம்

ஆண்டவராகிய இயேசுவுக்கு வழியை ஆயத்தம்பண்ண வந்த தேவனுடைய மனுஷனுமாகிய யோவன்ஸ்நானன், நீதியும் பரிசுத்தமுள்ளவனுமாக இருந்தான். அக்காலத்திலே இருந்த, ஏரோதுராஜா தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டபோது, யோவான்ஸ்நானன் ஏரோதை நோக்கி: நீர் உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்லவென்று சொன்னதினிமித்தம், ஏரோது தனது சேவகரை அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான். ஏரோதியாளும் யோவன்ஸநானனுக்கு சதி நினைத்து, அவனைக் கொன்றுபோட மனதாயிருந் தாள். சமயம் வாய்தபோது அவனை சிரைசேதம் செய்வித்தாள். தேவனானவர், தம்முடைய பிரதானமான நோக்கம் மனிதர்களில் நிறைவேறும்படிக்கு, தம்முடைய தாசர்களை அனுப்புகின்றார். ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கும், மனிதர்கள் மனந்திரும்பும்படிக்கு, தம்முடைய தூதர் களை அனுப்புகின்றார். ஒருவன் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தால், தேவன் தன் வார்த்தைகளை அவன் வாயில் அருளுகின்றார். தேவனுடைய தீர்க்கதரிசியானவன், தேவன் கற்பித்தபடியே, ஒன்றையும் அதனோடு சேர்க்காமலும், ஒன்றுறையும் அதிலிருந்து எடுத்துப் போடாமலும், தேவன் கற்பிப்பதையெல்லாம் உள்ளபடி அதிகாரிகளுக்கும், ஜனங்களுக்கும் கூறவேண்டும். அவருடைய தூதை கொண்டு செல்கின்றவர்களும், தேவனானவர் மனதுருக்கமுள்ளவர் என்பதை நன்கு அறிந்தவர்களாக இருக்கின்றார்கள். தேவனுடைய பிரத்தியேகமான அழைப்பைப் பெற்ற யோவாஸ்நானனானவனும், தேவ தூதை அதிகாரிகளுக்கும், மதத்தலைவர்களுக்கும், ஜனங்களுக்கும், ராஜாவிற்கும் உரைத்தான். அவர்களுடைய அவல நிலையை கண்டித்து, அவர்கள் மனதிரும்புதற்கு என்ன செய்ய வேண்டும் என்னபதை விளக்கிக் கூறி. தேவனுடைய ராஜ்யத்திற்குள் ஜனங்களை வழிநடத்தினான். சிலர் அவனுடைய வார்த்தையைக் கேட்டு, மனதிலே குத்துண்டவர்களாக, தங்களைத் தாழ்த்தி மனந்திரும்பினார்கள். ஆனால், ஏரோது மனந்திரும்ப மனதில்லாமல், அவனை கொலை செய்தான். பிரியமானவர்களே, மற்றவர்களுடைய குற்றங்களை சுட்டிக்காட்ட நீங்கள் அழைக் கப்பட்டிருந்தாலும், தேவனுடைய பிரதானமான நோக்கத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அந்த சிந்தையைத் தரித்தவர்களாக, நஷ்டம் ஏற்பட்டாலும், தேவ நீதி நிறைவேற இடங்கொடுங்கள்.

**மத்தேயு 3:2**

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருக்கின்றவர்களுக்கு வெளிச்சம் தரவும், அவர்களை சமாதானத்தின் வழியிலே நடத்தவும் நான் தேவ நற்செய்தியை அறிவிக்க என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| ஞாயிறு \| பங்குனி 12 | 📖 மாலை வாசகம் – 1 கொரி 4:5 |
|---|---|

# உலகத்தை இரட்சிக்கவந்தேன்

யோவான்ஸ்நானன் சிரைச்சேதம் செய்யப்பட்டான் என்ற சங்கதியை இயேசுவுக்கு அறிவித்தார்கள். இயேசு அதைக் கேட்டு அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள். இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவதூதை அறிவிக்க வந்த யோவான் ஸ்நானக்கு அநியாயம் செய்தார்கள். அநியாயம் செய்தவர் களுக்கு உடனடியாக தண்டனை வழங்குவதற்கு ஆண்டவர் இயேசுவுக்கு முடியாத காரியமா? இல்லை, ஆண்டவர் இயேசுவால் ஆகாதது ஒன்றுமில்லை. ஆனாலும், அவரோ, தாம் இந்த பூமிக்குவந்த பிதாவின்பிரதானநோக்கம் தன்னில் நிறைவேறும்படி ஏரோதை நியாயந்தீர்க்கவில்லை. ஏரோதை மட்டுமல்ல, ஒருவன்என்வார் த்தைகளைக்கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை. நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது.நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் என்று இயேசு கூறியிருக்கின்றார். எனவே உலகத்திலே அநியாயங்கள் நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் தினமும் கேள்விப்படுகின்றோம் அத்துடன் சிலவற்றை நேரில் காண்கின்றோம். சிலவேளைகளிலே அறிந்தோ அறியாமலோ அவற்றுள் நாமும் பங்காளிகளாகவும் மாறிவிடுகின்றோம். இவை யாவற்றின் மத்தியிலும், தேவன் முன்குறித்த காலத்திற்கு முன் யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் செய்யாமல், தேவ னுடைய சித்தம் உங்களில் நிறைவேற இடங்கொடுங்கள். இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைக ளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான் என்று வேதத்திலே வாசிக்கின்றோம் (யூதா 1:14-15). எனவே நீடியபொறுமையுள்ளவர்களாகதேவனுடைய இரட்சிப்பு உங்களில் நிறைவேற இடங்கொடுங்கள்.

**யோவான் 12:47**

**நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன்.**

**ஜெபம்:** இருளில் மறைந்திருக்கிறவைகளை, இருதயங்களின் யோசனைகளையும் அறிந்த தேவனே, நீர் அவைகளை வெளிப்படுத்தும் நாள்வரைக்கும், உம்முடைய சித்தத்தை நான் செய்ய எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

| திங்கள்\| பங்குனி 13 | 📖 மாலை வாசகம் – லூக்கா 15:9 – 32 |
|---|---|

# விலையேறப்பெற்ற இயேசுவின் இரத்தம்

உன்னுடைய முன்னைய வாழ்க்கையையும் துன்மார்க்கமான வழியையும் நான் மட்டுமல்ல, இந்த ஊரே நன்றாக அறிந்திருக்கின்றது. நீ உன் குடும்பத்தாரை அவமானப்படுத்தி இந்த ஊரையும் ஏமாற்றிய செயல்களை நீ மறந்து போய், வேதத்தை கையிலேந்திக் கொண்டு சாதுவை போல பேசினால் நாங்கள் உன் பழைய வாழ்க்கையை மறந்துவிட்டோம் என்று எண்ணங்கொண்டாயா என்று நற்செய்தியை அறிவிக்க வந்த ஒரு சகோதரனைப் பார்த்து, குறிப்பிட்ட அந்த ஊரிலே சன்மார்க்கன் என்று கருதப்பட்ட மனிதனொருவன் கடிந்து கொண்டான். அந்த சகோதரனானவன், ஆண்டவர் இயேசுவை அறிய முன்பு தன் கண் போன போக்கிலே வாழ்ந்தது உண்மையே. ஆனால், அது அவனுடைய பழைய வாழ்க்கை. இப்போது அவன் தன் பாவங்களை விட்டு மனந்திரும்பி, மீட்பராகிய இயேசுவிடம் தன் வாழ்க்கையை முழுவதுமாக ஒப்புக் கொடுத்துவிட்டான். விலையேறப்பெற்ற இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, அவனை சுத்திகரித்தது. இப்போது அவன் தன் மாம்ச இச்சைகளின்படி தனக்கு இஷ்டமானவைகளை செய்யாமல், தன்னை மீட்டுக் கொண்ட பிதாவாகிய தேவனின் சித்தத்தை செய்ய தன்னை ஒப்புக் கொடுத்துவிட்டான். ஆனால், அவனுடைய மனந்திரும்புதலும், ஆண்டவர் இயேசுவினுடைய பாவமன்னிப்பும் அந்த குறிப்பிட்ட ஊரிலே வாழ்ந்த சன்மார்க்கனுக்கு விசனமாகவே இருந்தது. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் இந்த உலக நீதியின்படி மனிதர்கள் எல்லைகளை வைக்கலாம். அதாவது, அறிந்தோ, அறியாமலோ, நினைத்தோ, நினையாமலோ பாவ சேற்றில் கிடக்கும் மனிதர்கள் தங்கள் வழிகளை விட்டு திரும்பி, சமுதாயத்துடன் இணைந்து கொள்ள முடியாத சூழ்நிலைகள் இந்த உலகிலே ஏற்படலாம். ஆனால், தேவனுடைய ராஜ்யத்திலே மனந்திரும்பி, ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்க்கின்ற யாவருர் மேலும் அவர் கிருபையை பொழிகின்றார். புதிய வாழ்வை கொடுக்கின்றார். அதுமட்டுமல்ல, நல்வழியிலே நடக்கின்ற அந்த சன்மார்க்கனும், தன்னைப் போல மாற வேண்டும் என்று ஆண்டவர் இயேசுதாமே நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார்.

**1 யோவான் 1:9**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**

**ஜெபம்**: உம்முடைய திவ்விய அன்பினாலே என்னை சேர்த்துக் கொண்ட தேவனே, என் இருதயம் உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவைப் போல மாறும் படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?

அசீரிய ராஜ்யத்தின் தலைநகராக நினிவே பட்டணம் இருந்தது. யார் இந்த அசீரியர்கள்? நோவாவின் குமாரனாகிய சேம் என்பவனுடைய, சந்ததியினூடாக உண்டானவர்களே. இவர்கள் மிகவும் பல த்தவர்களும், கெடிதும் கொடியதுமான படையையுடையவர்கள். இவர்கள் அநேகம் ஜாதிகளை அழிக்கவும், சங்கரிக்கவுமே தங்கள் மனதிலே நினைவு கொண்டிருந்தார்கள். பெருமையான நெஞ்சின் வினையும், கண்களின் மேட்டிமையான பார்வையும் இவர்களிடமிருந்தது (ஏசாயா *10:5-34*). அசீரியர்கள் இஸ்ரவேல் ஜனங்களை பொறுத்த வரையில், புறஜாதியரும், பகைஞருமாக கணிக்கப்பட்டிருந்தார்கள். நினிவே பட்டணத்தின் அக்கிரமம் மிகுதியானதினால், இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாகிய யோனாவின் வழியாக நினிவேக்கு சீக்கிரத்தில் வரவிருக்கும் நியாத்தீர்ப்பை குறித்த எச்சரிப்பை வழங்கினார். யோனாவோ, தேவனாகிய கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிந்து அங்கு போதவற்கு முதல்முறை மறுத்தான். பின்பு, நினிவேக்கு சென்று அந்த எச்சரிப்பின் செய்தியை கூறினார். நினிவே மக்களும், அதிகாரிகளும், ராஜாவும், தங்களை தாழ்த்தி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்பி, உபவாசித்து, கர்த்தரை நோக்கி பார்த்தார்கள். அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய் வேன்என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். ஆனால், கர்த்தருடைய மனதுருக்கம், யோனாவி ற்கோ விசனமாயிருந்தது. அவன் கடும்கோபம் கொண்டான். தான் மரித்துப் போனால் நலமாயிருக்கும் என்று கூறினான். அதற்குக் கர்த்தர்: நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார். பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கின்ற தேவனாகிய கர்த்தர், நம்முடைய பகைஞர்களுக்கும் தயவு செய்யகின்றார் என்பதை மறந்து போய்விடாதிருங்கள். அவர்கள் மேல் நீடியபொறுமையுள்ளவராயிருக்கின்றார். அக்கிரமம் மிகுதியாகும் போது எச்சரிப்பை வழங்குகின்றார். உண்மையாக மனந்திரும்புகின்ற எந்த ஆத்தமாவையும் அவர் ஆதரிக்கின்றார். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். என்ற வாரத்தைகளை மனதில் பதியவைத்து, பகைஞரின் அழிவையல்ல, அவர்களுடைய மனந்திரும்புதலை எதிர்பார்த்து, அவர்களுக்காக எப்பொழுதும் ஜெபம் செய்யுங்கள்.

**யோனா 4:4**

**அதற்குக் கர்த்தர்: நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்.**

**ஜெபம்**: தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறன்ற தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய கிருபையினாலே நான் நிலைநிற்கின்றேன் என்பதை நான் ஒரு போதும் மறந்து போகாதபடிக்கு நீர் கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| புதன் \| பங்குனி 15 | 📖 மாலை வாசகம் – யோவான் 3:16 |
|---|---|

# உன் எதிரியின் ஆத்துமா அழிய வேண்டுமா?

ஒரு ஊரிலே துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்து வந்த மனிதனொருவன், அயலிலே வசித்து வந்த தேவபக்தியுள்ள அயலவனொருவனுக்கு காரணமேதுமின்றி பெருந் தீங்கை செய்துவிட்டான். மனவேதனையடைந்த அந்த தேவ பக்தியுள்ள அயலவனானவனோ, "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்." என்ற வார்த்தைக்கமைய தேவன் அந்த பொல்லாத வழியில் வாழும் மனித னுக்கு அவனுடைய பொல்லாத வழி களுக்குதக்கதான பேரழிவை கொண்டு வருவார் என்று எதிர்பார்த்து காத்திருந்தான். ஆனால், அந்த பொல்லாத மனிதனானவனை ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே ஆண்டவர் இயேசு சந்தித்தார். தன் அழுக் கான வாழ்க்கையை உணர்ந்து, மனமாற்றமடைந்து, அவன் ஆண்டவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அவன் மனதிலே பெரிதான சந்தோஷம். தான் தீங்கு செய்த மனிதர்களைக் கண்டு அவன் மன்னிப்பை கேட்டு ஒப்புரவாகிக் கொண்டான். அந்த தேவ பக்தியுள்ள அயலவனானவனிடமும் மன்னிப்பு கேட்பதற்காக சென்றிருந்தான். ஆனால், அந்த அயலவனானவனோ, தன் மனதை கடினப்படுத்திக் கொண்டு, தன் மேய்ப்பனானவரிடம் சென்று, அவரை நோக்கி: எனக்கு தீங்கு செய்த பொல்லாதமனிதனுக்கு தண்டனையில்லையா? இது நியாயமா? என்னை எவ்வளவாய் துன்பப்படுத்தினான்? என்று கசந்து கொண்டான். அந்த மேய்பரானவர் அவனை நோக்கி: மகனே, நீ இரட்சிப்படைந்த நாளை நினைத்துப் பார். அதன் பின்னரும் நீ தேவனுக்கு விரோதமாக செய்த பாவங்களை எண்ணிப்பார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். நானும் இயேசுவை அறிய முன்பு ஒரு துஷ்டனாக நாட்களை கழித்து வந்தேன். நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமல்லவா? மீட்பர் இயேசு உனக்காகவும், எனக்காகவும் மட்டுமா மரித்தார்? அவர் மனித குலத்தின் பாவங்களனைத்தையும் தம்மேல் சுமந்து கொண்டார். உன்னுடைய பகைஞனாயிருந்தவனும் தேவ ராஜ்யத்தில் சேர்ந்து கொண்டான் என்று தேவனுக்கு நன்றி செலுத்து என்று அவர் அறிவுரை கூறினார்.

**சங்கீதம் 103:10**

**நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.**

**ஜெபம்:** மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கிய பிதாவே, உமக்கு நன்றி அப்பா! மனக்கசப்பை என்னைவிட்டு அகற்றிவிடுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதற்காக அழைக்கப்பட்டீர்கள்?

தங்கள் தந்தையாரின் சொத்துக்களை முறைப்படி அவனுடைய இரண்டு குமாரர்களும் சுதந்தரித்துக் கொண்டார்கள். ஆண்டுகள் கடந்து சென்று தந்தையாரின் மறைவிற்கு பின்னர், இந்த இரு சகோதரர்கள் மத்தியிலே தங்கள் நிலங்களின் எல்லையை குறித்த தகராறு ஏற்பட்டுவிட்டது. அந்தப் பிரச்சனையை தங்களுக்கிடையே தீர்த்து வைக்க முடியாமல், எதிரெதிராக வழக்கு தாக்குதல் செய்தார்கள். இரண்டு பகுதியினரும் தங்களுக்கென வழக்கறிஞர்களை தெரிந்து கொண்டு, அந்த வழக்கிலே வெல்லும்படி அதிக பணத்தையும் செலவு செய்து வந்தார்கள். ஒரு இரவிலே, அவர்கள் வாழ்ந்த ஊரைத் தாக்கிய பெரும் சூறாவளியானது அவர்கள் வீடுகளையும், பண்ணையும் முற்றாக அழித்து, அவர்கள் நிலங்களுடைய எல்லைகளைக் கண்டு கொள்ள முடியாதபடிக்கு, பரந்த வெளிநிலங்களாக காணப்பட்டது. அந்த ஊராருடன், அவர்களும், ஒரு ஆலயத்தில் அகதிகளாக தங்கியிருந்த போது, தங்கள் மதியீனமான வாழ்க்கையை இருவரும் உணர்ந்து கொண்டார்கள். தந்தை விட்டுச் சென்ற ஆசீர்வாதங்களை தங்களுக்கு கண்ணியாக மாறியதையும், அது தமது நல்லிணக்கத்தை கெடு த்து, மனக்கசப்பை உண்டாக்கியதை கண்டு கொண்டார்கள். இதற்காகவா அவர்களுடைய தந்தையார் தன் குமாரர்களுக்கு சொத்துக்களை விட்டுச் சென்றார்? சற்று சிந்தனை செய்து பாருங்கள். அவர்களிடம்திரளான செல்வம் இருந்தும், தங்கள் மாம்சம் இச்சித்தத்தை தாங்கள் பெறவேண்டும் என்பதை ஒரேநோக்கமாக அவர்கள் கொண்டிருந்தார்கள். அதன் முடிவாக அழிவு சடிதியாய் வந்தது. பிரியமானவர்களே, நாமும்தேவ கிருபையினாலே, விலைமதிக்க முடியாத இரட்சிப்பை இலவசமாக பெற்றிருக்கின்றோம். அதன் வழியாக நமக்கு வைக்கப்பட்டிருக்கின்ற நித்திய ஜீவனுக்கென்று அழைப்பையும் பெற்றவர் களாக, கர்த்தருடைய நாளை எதிர்பார்த்திருக்கின்றோம். கர்த்தருடைய நாளுக்கென்று ஆயத்தமாக இருப்பவர்களுக்கு, அந்த நாள் நித்திய மகிழ்ச்சியின் நாளாக இருக்கும். ஆனால், ஆயத்மற்றவர்களாக தங்கள் சுயஇச்சகைகளைநிறைவேற்றுகின்றவர்களுக்கு அந்நாள் பெருங்கண்ணியைப் போல சடுதியாய் வரும். மனந்திரும்பவோ, மனம்மாறவோ நேரம் இருக்காது. எனவே அநித்தியமானவைகளை நோக்காமல், நித்தியமானவைகளை பற்றிக் கொண்டு, கர்த்தருடைய நாளுக்காக ஆயத்தப்படுவோமாக.

**லூக்கா 21:34**

**நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, கிருபையின் நாட்களை வீணடித்து, மனக் கசப்பை வளர்த்துக் கொள்ளாமல், உம்முடைய நாளுக்கென்று ஆயத்தப்பட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தின் நிலைப்பாடு

காலை வேளையிலே தன் வீட்டுப் பூந்தோட்டத்திலுள்ள மலர்களை பார்த்து ரசித்துக் கொண்டிருந்த மனிதனானவன், தன் வீட்டின் வேலியின் அப்புறத்திலே இருந்த அயலவனொருவனின் காணியிலே இருந்த குப்பை கொட்டுமிடத்தில் இருந்த கழிவுகளிலிருந்து நாற்றமானது வீசுவதை நுகர்ந்து கொண்டான். தன் வீட்டின் தோட்டத்திலே அழகான மலர்களிலிருந்து வாசனையும், பக்கத்திலிருந்த காணியிலே அசுத்தமான குப்பையிலிருந்துதுர்நாற்றமும் எழுந்தது. தேனீக்கள் மலரை நாடி வந்தது. ஈக்கள் அசுத்தத்தை நாடி குப்பையிலே இருப்பதையும் அவதானித்தான். இந்த வேறுபட்ட நிலைமைகளை சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு மனிதனானவன் தன் நிலத்தை அழகான மலர் செடிகள் வளருமிடமாகவும், அயலிருந்த மனிதனானவன் தன்னுடைய சொந்த நிலத்திலே அசுத்தங்கள் தேங்கிக் கிடக்குமிடமாகவும் வைத்திருந்தார்கள். இன்று மனிதர்கள் தங்கள் இருதயமாகிய நிலத்தை வெவ்வேறு காரியங்கள் குடிகொள்ளும் இடமாக பேணிப் பராமரித்து வருகின்றார்கள். நாமெல்லாரும் ஆண்டவராகிய இயேசுவை அறிய முன்னதாக இருந்த நாட்களிலே, நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். மாம்சத்தின் இச்சைகள் நம் இருதயத்தில் குடிகொள்வதற்கு நாம் இடம் கொடுத்திருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். எனவே நாம் மறுபடியும் நம்முடைய இருதயத்தை மாம்ச இச்சைகள் தங்குவதற்கு வழிவகுத்து கொடுப்பது ஏற்புடையதாக இருக்குமா? மாம்சத்தின் கிரியைகளாகிய விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் எங்கள் வாழ்க்கையில் இல்லை என்று மேன்மைபாராட்டும் சில தேவபிள்ளைகளோ, பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள் தங்கள் இருதயத்தில் நிலை கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றார்கள். பிரியமானவர்களே, கர்த்தருடைய பாடுகளை அதிகமாக தியானம் செய்யும் இந்த நாட்களிலே, நம்முடைய இருதயத்தை பயன் தரும் நிலமாக பரிசுத்தப்படுத்தி, பண்படுத்தி, பரா மரித்து கொள்வோமாக.

**யாக்கோபு 4:8**

**உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்**

**ஜெபம்:** திவ்விய சுபாவத்திற்கு பங்காளிகளாக என்னை அழைத்த தேவனே, என் இருதயத்தை நான் மறுபடியும் மாம்ச இச்சைக்கு இடங்கொடாமல், பரிசுத்தப்படுத்தி காத்துக் கொள்ள என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய பார்வையிலே நீதிமான் யார்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த முதியவரொருவர், அவருடைய சிறிய வயதிலிருந்தே, சன்மார்க்க வழியில் நடந்து, ஊரார் மத்தியிலே நன்மதிப்பு பெற்றிருந்தார். அவருடைய வாழ்க்கையின் நடவடிக்கைகளைப்பார் த்து, இந்தக் காரியத்திலே அவர் தவறிவிட்டார் என்று சுட்டிக்காட்டுவதற்கு ஏதாவது குற்றத்தை கண்டுபிடிப்பது மிகவும் அரிதாகவே இருந்தது. ஒரு நாள், அவர் வழமைபோல கடைக்கு சென்று திரும்பி வரும்போது, கல்லொன்று தடக்கி, அவர் தெருவோரமாக விழுந்து விட்டார். அவருடைய கால்களிலேஏற்பட்ட காயங்களினாலே, எழுந்திருக்க முடியாமல், அவர் தெருவிலே அநாதரவாக கிடந்தார். அந்த வழியாக வந்த அயலிலுள்ள உறவினனொருவன், அவரை தூக்கிக் கொண்டு செல்லும்படிக்கு அருகில்சென்றான். வெயில் கொடுமை ஒருபக்கதிலே, காயங்களோடு அரை மயக்கத்துடன் இருந்த அந்த முதியவர், தனக்கு உதவி செய்ய வந்த மனிதனானவனை நோக்கி: நீ மட்டும் என்னைத் தொடாதே, உன்னிடத்தில் உதவியை பெறுவதைவிட நான் மரித்து போவது எனக்கு நலம் என்று அகங்காரத்தோடு கூறினார். அந்த முதியவர் தன்னை ஊருக்கு உத்தமனாக காட்டிக் கொண்ட போதும், தன்னுடைய உறவினன் பல ஆண்டுகளுக்கு முன் செய்த துரோகத்தை தன் மனதிலே வைத்து, அந்த உறவினனைக் குறித்த கசப்பை தன் இருதயத்திலே வளர்த்து காத்து கொண்டு வந்தார் என்பது அப்போது தெளிவானது. நாமும் நம் இருதயத்திலே பொக்கிஷமாக மறைத்து வைத்து, வளர்த்து வரும் ஆகாத காரியங்கள் நம்முடைய பெலவீன நாட்களிலே நம்மை மேற்கொண்டு விடும். அந்த முதியவரின் உறவினன் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு தவறு செய்தது உண்மை. ஆனால், சன்மார்க்கரான முதியவரோ, தன் உள்ளத்தில் கசப்பையும், வைராக்கியத்தையும், பெருமையையும் பல ஆண்டுகளாக வளர்த்து வந்தார். இந்த உலகத்திலே ஒரு நீதியுண்டு. இவை பல மனிதர்களால் ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆனால், நாமோ, இந்த உலகத்தின் நீதியின்படியல்ல, தேவ நீதியின்படி வாழும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். மனிதர்களுடைய வெளியரங்கமான பாவங்களை குறித்து நியாயந்தீர்க்கும் சிலர், தங்கள் இருதயத்திலே இருளின் அதிகாரத்திற்குரிய சுபாவங்களை வளர்த்து வருகின்றார்கள். நாம் அப்படி இருக்கலாகாது. நாம் இயேசுவின் சாயலிலே வளர்ந்து பெருகின்றவர்களாக வாழ்வோமாக.

**மத்தேயு 7:3**

**நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?**

**ஜெபம்:** இருதயத்தை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, மற்றவர்கள் எனக்கு செய்யும் துரோகத்தினிமித்தம் நான் என் இருதயத்தை, தீமை குடிகொள்ள இடங்கொடாமல் இருக்க என்னை உணர்வுள்ளவனாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உதவி செய்யும் ஆவியானவர்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இளைஞர்கள் மத்தியிலே, சில தீய அடிமைத்தன பழக்கங்கள் அதிகரித்துக் கொண்டு வந்ததால், குறிப்பிட்ட தொண்டர் ஸ்தாபனமொன்று, மருத்துவ நிபுணர்களுடனும், சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுடனும் இணைந்து, அந்த ஊரிலுள்ள சனசமூக நிலையத்தில், இலவசமான இளைஞர் புனர்வாழ்வு சேவையை ஆரம்பித்தார்கள். அந்த சேவையிலே, அவர்கள், பாதிக்கப்பட்ட இளைஞருடைய மறுசீரமைப்புக்காக நடமுறை செயற்பாடுகளையும், பாதிக்கபடாத இளைஞர்கள் மத்தியிலே போதைவஸ்து சம்மந்தமான அடிமைத்தனத்தைக் குறித்த விழிப்புணர்வை, கொண்டு வரும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கொடுக்க ஆயத்தமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால், அந்த ஊரிலுள்ள பெற்றோர்களில் ஒரு சிலரோ அந்த உதவியை பெற்றுக் கொள்ள மனதில்லாதவர்களாக இருந்தார்கள். தங்கள் பிள்ளைகள் சீர்கெட்டு அழிந்து போனாலும், அவர்களுடைய நிலைமை யாருக்கும் தெரியக்கூடாது. அது எங்களுக்கு அவமானத்தையும், குடும்ப கௌரவத்தை பாதிக்கும் என்று உதவியை தள்ளிவிட்டார்கள். பிரியமானவர்களே, இன்று சில தேவபிள்ளைகளும்கசப்பு, எரிச்சல், வன்மம், பகை, பிரிவினை போன்ற பாவ அடிமைத்தனங்களிலே சிக்கி விடுதலையடைய முடி யாமல் வாழ்கின்றார்கள். ஆவிக்குரிய நோய் கொண்ட அவர்கள் மனதிலே சமாதானம் இல்லாதிருந்தும், நாங்கள் நன்றாக இருக்கின் றோம் என்று கூறிக் கொள்கின்றார்கள். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க் கையிலும் நமக்கு போராட்டங்கள் உண்டு என்று வேதம் தெளிவாகக் கூறுகின்றது. அந்தப் போராட்டங்களிலே நாம் தனியாக விடப்படுவதில்லை. நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்ப ட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியராகிய இயேசு நமக்கிருக்கிறார். நாம் தனித்துவிடப்படாதபடிக்கு, என்றென்றும் நம் மோடு இருக்கும்படிக்கு அவருடைய நாமத்தில் சத்திய ஆவியான வரை நமக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார். எனவே மனதிலே மறைந் திருக்கும் பெலவீனங்களை அறிக்கையிடுங்கள். ஆவியானவரின் துணையை நாடுங்கள்.வேதம் கூறும்ஆலோசனைகளை கேளுங்கள்.ஆவியாவனர் உங்கள் மேய்ப்பர் வழியாக கூறும் அறிவுரைகளை அசட்டை செய்யாமல் அதற்கு கீழ்படியுங்கள். தேவன்தாமே எல்லா மறைவான கட்டுகளிலும் இருந்து விடுதலை தந்து நடத்திச் செல்வார்.

**ரோமர் 8:26**

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்.**

**ஜெபம்:** பெலவீன நேரங்களிலே பெலன் தரும் தேவனே, என்னுடைய பெலவீனங்களிலே நான் அழிந்து போகாமல், அவைகளை ஜெயங் கொள்ளும்படி என்னை நீர் உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் வாழ்வின் குறிக்கோள் என்ன?

அவன் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்தீர்களா? அவன் போகாத தேசங்கள் இல்லை. அவன் உண்ணாத உணவுகள் இல்லை. உயிரோடு இருக்கும்வரை உல்லாசமாக வாழ்ந்து எல்லாவற்றையும் நன்றாகவே அனுபவித்தான். வாழ்ந்தால் அவனைப்பேல வாழ வேண்டும் என்று ஒரு மனிதனானவனனுடைய அடக்க ஆராதனையில்காலஞ்சென்ற அந்த மனிதனானவனை பற்றி சிலர் பேசிக் கொண்டார்கள். இந்த உலகிலே உயிரோடிருக்கின்ற மனிதர்களில் பலர், வாழ்க்கையில் என்னத் தைக் கண்டோம்? என்னத்தை சாதித்தோம் என்று மனதில் புலம்பிக் கொள்கின்றார்கள். மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு சாராருமே தங்கள் மனதின்விருப்பங்களையும், அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதையே வாழ்க்கையின் மேலான குறிக்கோள் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? வெள்ளியையும் பொன்னையும், பொருள்களையும் சேகரித்தேன். எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன் என் ஞானமும் என்னோடேகூட இருந்தது. என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை. என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்றுவிலக்கவில்லை. என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன் இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது. சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை. எல்லாம் மாயை என்று பிரசங்கி கூறுகின்றார். ஆம், பிரியமானவர்களே, இந்த உலகமும், அதிலுள்ளவைகள் யாவும் அழிந்து போகும். அதை வாஞ்சித்து, அதை பற்றிக் கொள்கின்றவர்களும்அப்படியே இருக்கின்றார்கள். ஆனால், இந்த உலகத்திலே வாழும்போது, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவனே தன் வாழ்க்கையை பயனுள்ளதாக வாழ்ந்த மனிதனாக இருக்கின்றான். அவனுடைய வாழ்வின் வெற்றியானது, இந்த உலகத்திலே எதை கண்டேன், ருசித்தேன், சாதித்தேன் என்பதைக் குறித்ததல்ல, மாறாக அவன் தன் முழுபெலத்தோடு பரலோகத்திலுள்ள மேலானவைகளை தேடும்படி தன் காலத்தை முதலீடு செய்கின்றான். உலகிலே துன்பம் உண்டானாலும், அவனோ பரலோகிலே நித்திய பேரின்ப வாழ்வை கண்டடைவான்.

**மத்தேயு 16:26**

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

**ஜெபம்:** எண்ணங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, இந்த உலகிலே வாழும்வரை பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதன் மேன்மையை நான் உணர்ந்து கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜனங்கள் போய்விடுவார்களோ?

மாலைநேர உதவி வகுப்புகளை நடத்தும் கல்வி நிலையமொன்றில், குறிப்பிட்ட வகுப்பிலுள்ள மாணவனொருவனின் தொல்லை அதிக ரித்துக் கொண்டே சென்றதால், அந்த வகுப்பின் ஆசிரியர், கல்விநிலையத்தின் நிர்வாகிகளிடம் முறையீடு செய்தார். அந்த மாணவனானவனை ஒழுக்கநெறியில் நடத்ததும்படி அவர்கள் பெற்றோருக்கு செய்தி அனுப்ப வேண்டும் என்று அவர் கூறினார். அதைகேட்ட நிர்வாகிகளில் ஒருவர், ஆசிரியரைநோக்கி: சேர்,அந்த மாணவனை நாங்கள் நெறிப்படுத்தினால், அவனுக்கு பின்னால் ஒரு மாணவர் குழுவே இருக்கின்றது. அவர்கள் யாவரும் எங்கள் கல்வி நிலையத்தைவிட்டு, வேறு இடத்திற்கு போய்விடுவார்கள். அதனால் எங்கள் கல்வி நிலையத்திற்கு பொருளாதார நஷ்டம் ஏற்படலாம். அத்தோடு உங்கள் சம்பளமும் பாதிக்கப்படலாம். அவர்கள் ஒழுங்காக மாதாந்த கட்டணத்தை செலுத்துகின்றார்கள். அவர்கள் கல்வி கற்காமல் தங்கள் காலத்தை வீணடித்தால், அது அவர்களுடைய பிரச்சனை. நாங்கள் அவர்களை சகித்துக் கொள்வது எங்களுக்கு இலாபமானது என்று கூறினார். அந்தப் பதிலை கேட்ட ஆசிரியர் அந்த நிர்வாகியின்மேல் கோபமடைந்தவராய். உங்கள் மகனானவனும் இப்படி காலத்தை விரயப்படுத்தினால், அவனை அப்படியே விட்டுவிடுவது நல்லதோ? அந்த மாணவனானவன், தான் செய்தது தவறு என்பதை அவன் அறிய வேண்டும். காலத்தை விரயப்படுத்தி பரீட்சையில் தோல்வியடைப் போகின்றான் என்பதை நாங்கள் அவனுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.பெற்றோரின் பிரயாசமும், எதிர்பார்ப்பும் வீணாய் போகின்றது என்று பெற்றோர் அறிய வேண்டும். அவர்கள் இந்த கல்வி நிலையத்தைவிட்டு செல்வதோ, இருப்பதோ அவர்களது தீர்மானம், ஆனால் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் சொந்த இலாபம் கருதாமல், நீதியை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் கூறினார். பிரியமானவர்களே, இன்று சில இடங்களிலே, எண்ணிக்கையை காத்துக் கொள்ளுவதற்காக, தேவ நீதியையும், தேவசிட்சையையும் போதிக்காமல், பராமுகமாக தவறுகளை விட்டுவிடுகின்றார்கள். சில விசுவாசிகளும் அவ்விதமான இடங்களையே நாடிச் செல்கின்றார்கள். ஆனால், நீங்களோ, அவ்வண்ணமாக இருக்காமல், சத்தியத்தை தூய்மையாக பேசும் இடங்களை நாடுங்கள். சுயஇலாபம் அல்ல, தேவ நீதியை நிறைவேற்றப்படும்படி, சத்தியமானதுதகுந்தவேளையிலேயாவருக்கும் பிரசங்கிக்கப்படல் வேண்டும்.

**2 தீமோத்தேயு 4:2**

**எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.**

**ஜெபம்:** சில வேளைகளிலே என்னை சிட்சித்து நல் வழியில் நடத்தும் தேவனே, நீர் நியமித்தவர்கள் என்னை கண்டிக்கும் போது நான் இறுமாப்படையாமல், உம் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிட்சைசெய்யாத மனிதர்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த பெற்றோர், மருத்துவ பரிசோதனைக்காக தங்கள் மகளானவளை சிறுவர்களுக்காக விசேஷித்த மருத்துவரிடம் கொண்டு சென்றார்கள். பல பரிசோதனைகளை செய்து முடித்த பின்பு, அந்த மருத்துவரானவர், தன்னுடைய ஆலோசனைகளை பெற்றோரிடம் கூறினார். உங்கள் மகளானவளுக்கு குறிப்பிட்ட நோயின் அறிகுறிகள் தெரிகின்றது. அவள் உண்ணும் உணவுவகைகளும், குடிக்கும் மென் பானங்களையும் குறித்து கவனமாக இருக்க வேண்டும். மேலும், அவளு டைய சில பழக்கவழக்கங்களை இப்போது மாற்றாவிட்டால், எதிர் காலத்திலே மனநி லையில் பாதிப்பு ஏற்படலாம் என்றும் கூறினார். தகப்பனானவர் தன் மகளை அதிகமாக நேசித்து வந்தார். அது போல, சிறுமியும் தன் தகப்பனோடு மிகவும் பட் சமாக இருந்து வந்தாள். அதனால், அவள் மனதை நோகப் பண்ணக் கூடாது என்று தகப்பனானவர், தன் மனையிவிடம் கூறினார். அதற்கு தாயானவள்: தன் கணவனை நோக்கி: உங்களுடைய அன்பிலே சுய நலம் இருக்கின்றது. நீங்கள் மருத்துவர் கூறியவற்றை செய்தால், அவள் உங்களோடு பட்சமாக இருக்கமாட்டாள் என்று உண்மையை எவ் வளவு நாட்களுக்கு கூறாதிருப்பீர்கள்? அவள் செய்யும் தவறான காரியங் களை அவளுக்குத் தெரியப்படுத்தி, எப்போது அவளை நெறிப்படுத்தப் போகி ன்றீர்கள் என்று கூறினாள். பிரியமானவர்களே, குடும்பங்களில் மட்டு மல்ல, சில வேளைகளிலே சபைகளிலும் அந்த தந்தையாரைப் போன்ற மனிதர்கள் காணப்படுகின்றார்கள். மேய்ப்பர்கள், மூப்பர்கள் மந்தைக ளில் சிலவற்றை நெறிப்படுத்தும் போது, வேறு சிலர் தங்கள் நற்பெய ரையும், நன்மதிப்பையும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, தவறுகளை நெறிப்படுத்துபவர்களை எதிர்த்துக் கொண்டு, தவறு கள் செய்கின்றவர்களை மனநோகப்படுத்தக்கூடாது, அவர்களை அன் போடு நடத்த வேண்டும், ஆதரவாக இருக்க வேண்டும் என்று தங்களது உரிமைகது குரல் கொடுக்கின்றவர்களாக காண்பித்துக் கொள் கின்றார்கள். இத்தகைய அன்பு முகஸ்துதியுள்ளதாக இருக்கின்றது. ஆம், உங்களை கடிந்து கொள்கின்றவர்கள் எல்லோரும் உங்கள் எதி ரிகளுமல்ல, உங்களை ஆதரித்து நடத்துகின்றவர்களெல்லோரும் உங் களது உண்மையான நன்மையைக் கருதி நடக்கின்றவர்களுமல்ல என் பதை அறிந்து கொள்ளுங்கள். எனவே, உங்களை தேவ வசனத்தி ன்படி சிட்சிக்கின்றவர்களை அற்பமாக எண்ணாதிருங்கள்.

**சங்கீதம் 94:13**

**சிட்சித்து, உம்முடைய வேத த்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**ஜெபம்**: அன்பின் பரம தந்தையே, உம்முடைய ஆலோசனைகளை நான் தள்ளிவிடாமல், அவைகளை ஏற்று, எனது வழிகளை மாற்றிக் கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கரிசனையுள்ளவர்கள் யார்?

ஒரு கிராமத்திலுள்ள ஆரம்ப கல்வி பாடசாலையொன்றில் கல்வி கற்பித்து வந்த ஆசிரியர், தன்னிடம் கல்வி கற்கும் மாண மாணவிகளின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வந்தார். பல ஆண்டுகளுக்கு பின், அவரிடம் கல்வி கற்ற மாணவனொருவன் மிகவும் குறும்பு செயல்களை செய்து வந்தான். அந்த ஆசிரியருமோ, இளைத்துப் போகாமல், அந்த மாணவனை நெறிப்படுத் திக் கொண்டே வந்தார். அவன் அந்த பாடசாலையில் கல்வி கற்ற 8 வருடங்களும், அந்த ஆசீரியரை மிகவும் வெறுத்துவந்தான். எட்டாம் ஆண்டில் அவன் பரீட்சைகளை சிறப்பாகச் செய்ததால், பட்டணத்திற்கு சென்று மேற்படிப்பை தொடர்ந்தான். பல ஆண்டுகளாக பட்டணத்திலே இருந்து, பட்டப்படிப்புக்களை முடித்து, பெரிய உத்தியோமொன்றிலே அமர்ந்து கொண்டான். ஒரு நாள் தன் பிள்ளை களில் ஒருவன் தொடர்ச்சியாக குறும்புகளை செய்கின்றான் அவன் இப்படியே தொடர்ந்தால், அவனை நெறிப் படுத்தும் படி, விசேஷபாடசாலைக்கு அனுப்புவோம் என்று பாடசாலையிலிருந்து எச்சரிப்பின் அறிக்கை வந்தது. அன்றிரவு அவன் படுக்கையிலிருக்கும் போது, தன்னுடைய ஆரம்ப கல்வியின் நாட்களை சிந்தித்துப் பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் வந்தது. அடுத்த நாளே, தன் குடும்பத்தாரோடு, தான் பிறந்த கிராமத்திற்குச் சென்று, தனக்கு கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியரை தேடினான். அவரோ வயது சென்றவராய், நோய்வாய்ப்பட்டு படுக்கையிலே இருந்தார். அவர் அருகே சென்றதும், அவனால் தன் அழுகையை அடக்க முடியவில்லை. அவன் அந்த ஆசிரியரைப் பார்த்து: என் இளமைக் காலத்தின், என் பாதுகாப்பின் வேலியாக இருந்தவரே, உங்கள் நீடிய பொறுமைக்கும்,கரிசணைக்கும் மிக்க நன்றி என்று அவன் தயவாய் கூறினான். அவனுடைய முன்னேற்றத்தை அறிந்த அந்த ஆசிரியர், மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆம், பிரியமானவர்களே, உங்களைக் குறித்து கரிசணையுள்ளமூத்தவர்கள் உங்களை கடிந்து கொள்ளும் நாட்கள் உண்டு. அவர்கள் உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துபெரு மகிழ்சியடைவார்கள். இத்தகையவர்கள் உங்களை குட்டினாலும், பொறுமையோடு ஏற்றுக் கொள்வது உங்கள் வாழ்விற்கு நன்மையைத் தரும். எனவே, கர்த்தருக்குள் உங்களை விசாரிக்கின்றவர்களை கனத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் புத்திமதிகளை மனதிலே பதித்து வைத்துக் கொள்ளுங்கள்.

**1 தெச 5:12**

**கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,**

**ஜெபம்:** பரலோக தந்தையே, எங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, விசாரணைசெய்கிறவர்களாயிருந்து,புத்திசொல்லுகிறவர்களை நாங்கள் அன்போடு ஏற்றுக் கொள்ளும்படி தெளிந்த புத்தியை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கை செழிப்பாக காட்சியளிக்கின்றது

திராட்சைத் தோட்டமொன்றின் முதலாளியானவன், தன் தோட்டதைப் பராமரிக்கும்படிக்கு சில ஊழியர்களை வேலைக்கமர்த்தி, அவர்கள் எப்படி தோட்டத்தை பாரமரிக்க வேண்டும் என்ற பயிற்சிகளையும், அறிவுரைகளையும் கொடுத்து, தூர தேசமொன்றிற்கு சென்றிருந்தான். சில காலத்திற்கு பின் அவன் திரும்பி வந்தபோது, தன் திராட்சைத் தோட்டத்தை பார்க்கும்படி சென்றிருந்தான். செடிகள் கிளைநறுக்கி சுத்தம்பண்ணப்படாததை கண்டு, தன் ஊழியர்களை அழைத்து அவர்களை விசாரித்தான். அவர்களின் கண்காணியானவன், முதலாளியை பார்த்து: ஐயா, அதிகமான கொடிகள் பலன் கொடுக்கின்றது அத்துடன் செடிகள் யாவும் வளர்ந்து, கொடிகள் யாவும் மிகவும் செழிப்பாக காட்சியளிக்கின்றது. ஆதலால் ஏன் கிளைநறுக்க வேண்டும் என்று சிந்தித்து அதை செய்யாது போனோம் என்றான். அதைக் கேட்ட முதலாளியானவன் கோபமடைந்தவராய், மதியீனர்களைப் போல நடந்து கொண்டீர்களே. கனிகொடு க்கின்ற கொடிகள் அதிக பலனைக் கொடுக்கும்படி அதை காலத்திலே கிளைநறுக்கி சுத்தம் செய்யப்பட வேண்டும். கனிகொடாத பலனற்ற கொடிகளானது அறுத்துப்போடப்படல் வேண்டும் என்பதை உங்களுக்கு சொல்லிக் கொடுத்ததை சீக்கிரமாக மறந்து போய்விட்டீர்களா என்று கேட்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் யாவரும் திராட்சை செடியாகிய இயேசுவில் ஒட்டப்பட்ட கொடிகளைப் போல பலன் கொடு க்கின்றவர்களாக வாழ வேண்டும். ஒருவன் சபையில் கிரியைகளை செய்கின்றான். தவறாமல் ஆராதனைகளுக்கு கலந்து கொள்கின்றான். அவனுடைய வாழ்க்கை அழகாக காட்சியளிக்கின்றது என்று நிர்விசாரிகளாக நாம் மாறிவிடக்கூடாது. தேவவார்த்தையின் ஆலோசனைகளின்படி, நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் குறித்த காலத்திலே கிளைநறுக்கி சுத்தம் செய்யப்படல் வேண்டும். பிதவாகிய தேவன் தாமே கிறிஸ்துவின் உபதேசத்தினாலே நம்மை சுத்திகரிக்கின்றார். எனவே வாழ்க்கையானது மற்றவர்களுடைய பார்வைக்கு செழிப்பாகஇருப்பதனால், அங்கே பெரிதான பலன் உண்டாகும் என்பது பொருளல்ல. ஆவிக்குரிய வளர்ச்சியில் இருப்பது போதும் என்று விட்டுவிடாமல், அதினதின் காலத்திலே அதிக கனியை கொடுக்கும்படிக்கு, குறித்த காலத்திலே நம் வாழ்க்கையானது, தேவ வார்த்தையின்படி சுத்தம் பண்ணப்படல் வேண்டும்.

**யோவான் 15:2**

**கனிகொடுக்கிறகொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.**

**ஜெபம்:** அன்பின் பிதாவே, நான் கனிகொடாத கொடியைப்போல மாறிவிடாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின்படி எனது உள்ளானமனிதனானது நாளுக்கு நாள் புதிதாகும்படி என்னை வழிடநத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தின் தியானங்கள்

தன் மகனானவனோடுகூட மரங்களை வெட்டும்படி காட்டிற்கு சென்ற தகப்பனானவன்,எப்படி மரங்களை துரிதமாகவும், நேர்த்தியாகவும் வெட்டுவதென்று தன்னுடைய மகனானவனுக்கு கற்பித்துக் கொடுத்தான். தகப்பனானவர் மிகவும் உரமாக மரங்களை வெட்டுவதைக் கண்ட மகனானவன், அதன் இரகசியம் என்ன என்று கேட்டான். அதற்கு தகப்பனானவர்: மகனே, எதை குறித்து அல்லது யாரைக் குறித்து நீ கோபமாக இருக்கின்றாயோ, அதை அல்லது அவர்களை மனதிலே நினைத்துக் கொண்டு, அந்த கோபமனைத்தையும் உன் பெலனாக மாற்றி, மரத்தை வெட்டு என்று கூறினார். சண்டைப் பயிற்சியை கொடுப்பவர் கள் இதுபோன்ற அறிவுரைகளை கொடுப்பதை ஒருவேளை நீங்கள் கேட்டிருக்கலாம். இத்தகைய முறைமையில்உண்மை இருக்கின்றதோ இல்லையோ என்பது தெரியாது ஆனால், இப்படியாக தங்கள் வேலைகளை செய்பவர்கள், தங்கள் மாம்சமான எண்ணங்களுக்கு பயிற்சி கொடுத்து, தங்களுக்குள் மறைந் திருக்கும் மாம்சமான மனிதனை பெலப்படுத்தி அவனை பராக்கிரமசா லியாக மாற்றிவிடுகின்றார்கள். இவ்வாறாகவே மனிதர்கள் தங்கள் கோபங்களையும் வெறுப்புக்களையும் மேற்கொள்ளும்படி வழிமுறைகளையும் கூறுகின்றார்கள். ஆனால், இவ்வாறான வாழ்க்கையானது, தேவனுடைய பிள்ளைக்குரிய வாழ்க்கை முறைமை அல்லவே. தேவனாகிய கர்த்தர்தாமே, தம்முடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதத்திற்கான வழிமுறைகளை சொல்லிக் கொடுத்திருக்கின்றார். பூமியிலே நல்ல நாட்களை காணும்படிக்கு, நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப்பேசுவீர்களாக.அவைகளைஉங்கள்வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக என்று கூறியிருக்கின்றார். எனவே, நாம், நம் மனதில் மாம்ச எண்ணங்களை பதித்து வைக்காமல், தெய்வீக சுபாவங்கள் வளர்க்கும்படிக்கும், உள்ளானமனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கும்படிக்கும், தேவ வார்த்தைகளின் தியானத்தினால் மனதை எப்போதும் நிறைத்து காத்துக் கொள்வோமாக.

**சங்கீதம் 1:2**

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்

**ஜெபம்**: ஜெயங்கொடுக்கும் தேவனே, என்னுடைய போராயுதங்கள் மாம்சபெலன் அல்ல என்பதை நான் உணர்ந்து, உம்முடைய வார்த்தையின்படி நான் ஜெயங்கொள்கின்றவனாக மாற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒரு போதும் கைவிடார்

வாழ்க்கையிலே பல தொல்லைகளும் கஷ்டங்களும் ஒன்றின்பின் ஒன் றாக வந்த நாட்கள் இருந்தது. இவை எப்படியாக முடியுமோ என்று கவலையடைந்த நேரங்களில், எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும் உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது என்று தேவனை நோக்கி புலம்பிய நாட்களில், தம்முடைய செட்டைகளின் நிழ லிலே அடைக்கலம் தந்து, கார் மேக ங்களைப் போல சூழ்ந்து கொண்ட தொல்லைகள் கஷ்டங்கள் ஒவ்வொ ன்றையும், ஒன்றின்பின் ஒன்றாக மேற்கொள்ளும்படிக்கு தேவனான வர் அதிசயமாக வழிநடத்தி வந் தார். இது என்னுடைய அனுபவ சாட்சி என்று ஒரு விசுவாசியான வன் தேவனைக் குறித்து மனமகிழ்ச்சியுள்ளவனாக இருந்தான். புலம் பலின் நாட்கள் கடந்து போய்விட்டது. அதன் பின்னர் வாழ்க்கையிலே பிரச்சனைகள் சூழ்ந்து கொள்ளும் போது, எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பி டுவேன் என்ற அறிக்கை நாவில் இருந்தது. ஆண்டுகள் கடந்து சென்று, தேவனை அறிகின்ற அறிவிலே இன்னுமாய் வளர்ந்து வந்தபோது, இக் கட்டும் நெருக்கங்களும் அலையலையாய் வந்து, வாழ்க்கைப் படகில் மோதிக்க கொண்டாலும், பிரச்சனைகளின் மத்தியிலும் "கர்த்தர் நல் லவர் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று துதி அவன் இருதயத்திலிருந்து எழுந்தது. பிரியமானவர்களே, "நீதிமான்களுடைய இரட்சி ப்பு கர்த்தரால் வரும் இக்க ட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்" எப்படியாக நீங்கள் அறிக்கையிடுகின்றீர்கள் என்பதை சிந் தித்துப் பாருங்கள். புலம்பலுடன் கூறுகின்றீர்களா? மனக் குழப்பத்துடன் கூறுகின்றீர்களா? அல்லது அசையாத நம்பிக்கையோடு அறிக்கையிடு கின்றீர்களா? சிந்தித்துப் பாருங்கள். தேவனை அறிகின்ற அறிவிலே நாம் நாள்தோறும் வளர்ந்து பெருகின்றவர்களாக இருக்க வேண்டும். நேற்றைய நாளைவிட இன்று நாம் தேவனை அறிகின்ற அறிவிலே வளர்ந்தவர்களாக காணப்படவேண்டும். இன்றைய நாளைவிட நாளைய நாளிலே, அந்த அறிவிலே இன்னும் பெருகின்றவர்களாக நாம் முன் னேறிச் செல்ல வேண்டும். போராட்டங்கள் மனதைக் கலங்கப்பண்ணும் போது, கடந்த நாட்களில் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து, அவ ருடைய மாறாத கிருபைகளுக்காக அவரைத் துதியுங்கள். பரம தந்தை யாகிய தேவன் நம்மை ஒருபோதும் கைவிடார். அவர் தம்முடைய பிள் ளைகளுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவிப்பார்

**சங்கீதம் 37:39**

**நீதிமான்களுடைய இரட்சி ப்பு கர்த்தரால் வரும்; இக்க ட்டுக்காலத்தில் அவரே அவ ர்கள் அடைக்கலம்.**

**ஜெபம்:** இளைப்பாறுதல் தரும் தேவனே, என்னை சூழ்ந்து கொள்ளும் பிரச்சனைகளை கண்டு நான் கலங்கி தவிக்காதபடிக்கும், உம்முடைய வார்த்தையை அறிக்கையிடுகின்றதில் உறுதியாய் இருக்க கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபத்தில் வளருவோம்

**மத்தேயு 6:10**

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

சிறுபிள்ளையாக இருந்த நாட்களிலே, தந்தையிடம் பணம் இருப்பில் இருக்கின்றதோ இல்லையோ என்ற எண்ணமேதுமிருக்கவில்லை. அப்படி சிந்திப்பதற்கு அதைக் குறித்த அறிவும் எனக்கு இருந்தில்லை. நான் நினை த்ததெல்லாம் எனக்கு வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். கண் கவர்ந்த விளையாட்டுப் பொருட்கள் அனைத்தையுமே வாங்கித் தரும்படி பிடிவாதமாக அழுத நாட்களுமுண்டு. வாலிப நாட்களில், சிந்தித்து செய லாற்றும் அறிவிருந்த போதிலும், சக நண்பர்களைப் போல வாழ வேண்டும் என்று, பொறுப்புணர் சியின்றி, வரவில்லாமல் செலவுகள் செய்த ஆண்டுகளுமுண்டு. புத்தி தெளிந்த போதோ, தந்தையாருடைய கஷ்டங்களை உணர்ந்து அவரோடு பங்காளியாக இணைந்து குடும்பத்தின் நலனுக்காக செய்யப்பட வேண்டிய தேவைகளுக்காக பிரயாசப்பட ஆரம்பி த்தேன். இப்போது புத்தியீனமாக, குழந்தைத்தனமாக நடந்து கொண்ட நாட்களை நினைத்து வெட்படுகின்றேன் என்று ஒரு மனிதனானவன் கூறிக் கொண்டான். கர்த்தருடைய பாடுகளை அதிகமாக தியானிக்கின்ற இந்த நாட்களிலே, நாமும் நம்முடைய ஜெப வாழ்க்கையிலே நம்மு டைய கர்த்தரைப் போல மாற வேண்டும். “நான், எனக்கு, என்னுடை யது” என்று சுயநலனுக்காக நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும் என்று ஜெபம் செய்யாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தமானது இந்தப் பூமியிலே நிறைவேறும்படிக்கு, நாம் நம்மை அவருடைய பரிபூரண திட்டத்திலே பங்காளிகளாக மாற்றிக் கொள்ள வேண்டும். பூமியும் அதன் நிறைவும் அதன் குடிகளும் கர்த்தருடையது. அவருடைய திட்டமானது அவருடைய நலனைக் குறித்ததல்ல. அவர் சர்வ வல்லமையுள்ளவ ராகவே இருக்கின்றார். அவருடைய அநாதிதீர்மானம் நம்முடைய நலனைக் குறித்ததாக இருக்கின்றது. நாம் இந்த உலகத்தின் மாயைக்குள் மறுபடியும் சிக்கிவிடாதபடிக்கு, பரலோத்திற்கு சென்றடைய வேண்டும் என்பதே நம்மைக் குறித்த அவருடைய அநாதி தீர்மானமாக இருக்கி ன்றது. அந்த திட்டம் நிறைவேறும்படிக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அதுவே நம்முடைய அனுதின ஜெபமாக மாறவேண்டும். தேவ ராஜ்யம் வருவதாக. தேவ சித்தம் பரம ண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று நாம் நம்மை அவரிடத்தில் ஒப்புக் கொடுப்போமாக.

**ஜெபம்**: பரலோக தேவனே, குழந்தைத்தனமான வாழ்க்கை வாழாமல், உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவைப் போல, உம்முடைய திருச் சித்தத்தில் பங்காளியாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம்மை பரிசுத்தமாக்கும் தேவன்

"நான் சிறுபிள்ளையாக இருந்த நாட்களிலே, என்னுடைய பெற்றோர் என்னை இரக்கமின்றி தண்டித்தார்கள். எனவே, நான் என்னுடைய பிள்ளைகளை தண்டிக்கவோ, கண்டிக்கவோ மாட்டேன். அவர்களை அன்பு காட்டி வளர்ப்பேன். இல்லை என்னும் வார்த்தை எதிர்மறையானது, எனவே ஆம் என்னும் ஆக்கபூர்வமான வார்த்தையே அவர்களுக்கு சொல்லிக் கொடுப்பேன் என்று ஒரு விசுவாசி தன்னுடைய பிள்ளை வளர்ப்பைக் குறித்து கூறிக்கொண் டான்." இந்தக் கூற்றானது கேட்பதற்கு நலமானதும், இந்த உலகத்தினால் ஏற் றுக் கொள்ளக்கூடியதாகவுமாக இருக்கின்றது. நெறிப்படுத்துதல், சீர்திருத்தம், சுத்திகரிப்பு, கண்டித்து உணர்த்துதல், கடிந்து கொள்ளுதல், பிழைதிருத்தம், வனைதல், எச்சரிப்பு, சிட்சை, கிளை நறுக்குதல் போன்ற வார்த்தைகள் வேதத்தில் பரிசுத்தமாகுதலைக் குறித்து கூறப்பட்ட அடிப்படை வார்த்தைகளாக இருக்கின்றது. ஒருவேளை மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்திலுள்ள விசுவாசியின் பெற்றோர்கள் இரக்கமற்றவர்களாக இருந்திருக்கலாம். அது குறிப்பிட்ட அந்தப் பெற்றோரின் தவறாக இருக்கலாம். அதனால் தன்னுடைய பிள்ளைகளை நெறிப்படுத்தாமல் வளர்ப்பேன் என்பது வேதம் கூறும் அறிவுரைக்கு எதிரானதாக இருக்கின்றது. அப்படி வேதத்தின் ஆலோசனைகளுக்கு எதிராக செயற்படுகின்றவர்கள், சிறுவர்களுக்கோ, வாலிபர்களுக்கோ, முதியவர்களுக்கோ தேவ ஆலோசனை கொடுப்பதை தவிர்த்துக் கொள்வது அவர்களுக்கு நல்லது. ஏனெனில், அவர்கள் மனநிலை இன்னும் பாதிக்கப்பட்டு, பெற்றோரை மன்னிக்க முடியாமலும், இருதயம் குணமடையாமல் இருப்பதனால், வேதத்தின் ஆலோசனைகளின்படியல்ல, மாறாக தங்கள் மனநிலையை மையமாக வைத்தே ஆலோசனைகளை கூறுவார்கள். உண்மையாக தங்கள் பிள்ளைகளை நேசிக்கின்ற எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் நற்பலன்களைக் கொடுக்கும்படி, அந்தந்தக் காலத்திலே அவர்களை சிட்சிக்கின்றார்கள். (எபி 12:6-11). உண்மையான நண்பனானவன், தன் நண்பனை உரிமையோடு கடிந்து கொள்வான் (நீதி 27:6). நாம் எந்த வயதுடையவர்களானாலும், பரம பிதாவின் பிள்ளைகளாயிருக்கின்றோம். எனவே தேவ ஆலோசனைகளை அசட்டை பண்ணாமலும், சிட்சைகளை அற்பமாக எண்ணாமலும், கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாமலும் இருப்போமாக.

**நீதிமொழிகள் 22:6**

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்

**ஜெபம்**: உம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்மைச் சிட்சிக்கிற தேவனே, வேதத்தின் ஆலோசனைகளின் வழியிலே நான் வாழும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முதன்மையானது என்ன?

என் பெற்றோரானவர்கள் விட்ட குறையை நான் விடப்போவதில்லை. என் பிள்ளைகள் எப்படியாவது கல்வி கற்கும்படி அதற்கு வேண்டிய யாவற்றையும் நான் செய்து கொடுப்பேன். நான் விட்ட குறையை என் பிள்ளைகள் விடாதபடிக்கு, அவர்கள் வீட்டில் படிக்கின்றார்களாக, என்பதில் நான் கருத்துள்ளவனாக இருப்பேன் என்று ஒரு விசுவாசியானவன், தீர்மானம் செய்து கொண்டான். அவன் தீர்மானம் செய்ததுபோல, பல சவால்கள் மத்தியிலும், அவன் கிரியை நடப்பித்தான். பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்தான். ஆண்டுகள் கடந்து சென்ற பின்னர், படித்து பட்டம் பெற்ற பிள்ளைகள், கைநிறைய உழைத்தார்கள். தன் பிரயாசம் விருதாவாய்ப் போகவில்லை என்று தந்தையாகிய அந்த விசுவாசியானவன் மகிழ்ச்சியடைந்ததான். ஆனால், காலங்கள் கடந்து சென்றதும், தன் பெற்றோர் விடாத மகா பெரிய தவறை தான் தன் பிள்ளைகளின் வளர்ப்பில் செய்துவிட்டதை உணர்ந்து மனவேதனையடைந்தான். அதாவது, அந்த விசுவாசியானவனுடைய பெற்றோர்,எளிமையான வாழ்க்கை வாழ்ந்த போதும், "கர்த்தரே தம்முடைய சகாயர்" என்பதை அவனுக்கு அருமையாக கற்றுக் கொடுத்தார்கள். ஆனால் அவனோ,தன் பிள்ளைகளின் வாழ்க்கையிலே உலக கல்வியை கற்க வசதிகளை செய்து கொடுத்து, அவர்களை மேதாவிகளாக்கியது உண்மை. ஆனால், வாழ்வில் என்ன நடந்தாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், அவர்கள் தேவனில் தங்கி வாழ வேண்டும் என்பதை அவர்களுக்கு அவன் கற்பிக்க வேண்டிய வயதில் கற்றுக் கொடுக்காமல் போனதினால், அவர்கள் தங்கள் கையின் பிரயாசத்தையே வாழ்வின் முதன்மையானதாக எண்ணிக் கொண்டார்கள். பிரியமானவர்களே, நாம் கல்வி கற்பதும், உழைப்பதும், பாதுகாப்பான உறைவிடத்தை கட்டிக் கொள்ளுவதும் நல்லது. ஆனால், நாம் பிரதானமாக அறிந்து கொள்ள வேண்டியதாவது, பரம பிதா நம்மை பிழைப்பூட்டுகின்றார், அவரே நம்முடைய சகாயர். நாம் எந்த வைத்தியத்தை செய்தாலும், சுகத்தை கட்டளையிடுகின்றவர், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே. நாம் எப்படிப்பட்ட கடற்கோட்டை கட்டி அதனுள்ளே வாழ்ந்தாலும், கர்த்தரே நம்முடைய உயர்ந்த அடைக்கலமானவர் என்பதை ஒரு போதும் மறந்து போய்விடக்கூடாது. இந்த பூமியிலே வாழும்வரை நாம் பல காரியங்களை நாளாந்தம் செய்து வருகின்றோம். அவை யாவற்றிற்கும் மேலாக கர்த்தரே எனக்கு சகாயர் என்பதே முதன்மையனாதும், அடித்தளமானதுமாக கொண்டு வாழ்வோமாக.

**எபிரெயர் 13:6**

**கர்த்தர் எனக்குச் சகாயர்,**

**ஜெபம்:** உன்னதமான என் தேவனாகிய கர்த்தாவே, நீரே என் அடைக்கலமும், கோட்டையுமானவர் என்பதை அறிக்கை செய்து, சர்வ வல்லவராகிய உம் நிழலிலே தங்கி வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அசையாத நம்பிக்கை

தன் மகளானவள், திருமணமாகி அவளுடைய கணவனோடு வாழும்படிக்கு செல்ல வேண்டிய நாள் அண்மித்த போது, தந்தையானவர் தன் மகளை அழைத்து அவளை நோக்கி: மகளே, நான் இந்த உலகத்தின் அளவுகோலின்படி பெரும் செல்வந்தனல்ல. ஆனால், நீ பிறந்த நாளிலிருந்து, என்னால் முடிந்த அளவிற்கு எதையெல்லாம் உனக்கு செய்தேன். என்னிடத்திலிருக்கின்ற ஒரு நன்மையையும் நான் உனக்கு மறைத்து வைத்ததுமில்லை. நாளைக்கு நீ உன்னுடைய வாழ்க்கையிலே ஒரு புதிய அத்தியாத்தை ஆரம்பிக்கின்றாய். நீயும் உன் கணவனும் இன்று நன்றாக கல்வி கற்றிருக்கின்றீர்கள், வசதியுள்ளவர்களாக உங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கின்றீர்கள். நாளை உங்களுடைய நிலைமை இன்னதென்பதையும், இனிவரும் ஆண்டுகளிலே நீங்கள் இருவரும் சந்திக்க வேண்டிய சவால்களையும் நீங்கள் அறியமாட்டீர்கள். ஆனால் ஒன்றைமட்டும் அறிந்து கொள்ளுங்கள்: "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா." என்னுடைய பிரயாசம் விருதாவாய் போகாதபடிக்கு கர்த்தர் என் கரத்தின் கிரியைகளை ஆசீர்வதித்தார். நான் என் கிரியைகளின் பலனையல்ல, கர்த்தரையே இன்னும் அதிகமாக இறுகப் பற்றிக் கொண்டேன். நீ நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன். அதை நீ விரும்பினால், நீ எக்காலத்திலும் கர்த்தரை நம்பு. உன் இருதயத்தை அவர் சமுகத்தில் ஊற்றிவிடு. அவரே என் அடைக்கலம் என்று அறிக்கை செய்து அவருடைய வார்த்தையின் வழியிலே வாழ்க்கை நடத்து. நீ எதை மறந்து போனாலும், நான் இன்று உனக்கு கூறியதை மறந்து போய் விடாதே என்று அறிவுரை கூறினார். ஆம் பிரியமான சகோதர சகோதரி களே, சமாதானமான வாழ்க்கையை கண்டடையும்படிக்கு மனிதர்கள் பல வழிகளிலே பிரயாசப்படுகின்றார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்க்கையிலே கர்த்தர் இல்லையென்றால், அவர்கள் காரிருளிலே வழியறியாதவர்களைப் போல தத்தளிக்கின்றவர்களாக இருப்பார்கள். கர்த்தரை நம்பியிருக்கின்றவர்களோ, எந்த சூழ்நிலைகளினாலும் அசைக்கப்படுவதில்லை. கர்த்தர்தாமே அணையாத தீபத்தை அவர்கள் உள்ளத்திலே ஏற்றியிருக்கின்றார். ஆபத்தை கண்டு அவர்கள் அஞ்சுதில்லை. அவர்களுடைய நம்பிக்கை கர்த்தரிலே இருப்பதினால், அவருடைய சமாதானம் அவர்களில் எப்போதுமே நிலைத்திருக்கின்றது.

**சங்கீதம் 62:8**

**ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்;**

**ஜெபம்:** என்றும் மாறாத தேவனே, அநித்தியமான இந்த உலகத்தின் காரியங்களில் நம்பிக்கை வைக்காமல், உம்மையே நான் என் நம்பிக்கையாக கொண்டிருக்க, பிரகாசமுள்ள மனக் கண்களை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலான வாஞ்சை

தாயின் கருவினிலே பிள்ளை உருவாகிற்று என்று நிச்சயிக்கப்பட்ட பின்னர், பெற்றோர் தங்கள் பிள்ளையைக் குறித்த பல ஆயத்தங்களைச் செய்கின்றார்கள். சிலர் தங்கள் பிள்ளையின் எதிர்காலத்தைக் குறித்து பற்பலதிட்டங்களைசெயற்படுத்துகின்றார்கள். சில நாடுகளிலே, பிள்ளை பிறந்த ஒரு சில மாதங்களுக்குள்ளேயே, பிள்ளையானது பல்கலைக்கழகத்தில் படிக்க தேவையான பணத்தை சேகரிக்கின்றார்கள். இப்படியாக பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நலனுக்கென்று ஆயத்தம் செய்யும் காரியங்களுக்கு முடிவில்லை. சில வேளைகளிலே, பெற்றோரிடம் வசதிகள் இல்லாவிட்டாலும், தங்கள் பிள்ளைக ளின் நலனை குறித்த எண்ணங்கள் பெற்றோரின் மனதிலே அநேகமாயிருக்கும். இவைகளிலே வாழும் ஊர், வீடு, கல்வி, கல்வி கற்கும் பாடசாலை என்ற பட்டியலானது பெற்றோரின் வசதிகளுக்கேற்ப நீண்டு கொண்டே செல்கின்றது. இப்டியாக பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க எப்போதும் சித்தமுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் ஒரு பிள்ளையானது இந்த உலகத்திலே பிறக்கின்றபோது, என்னுடைய பிள்ளை தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியிலே செய்ய வேண்டும். என்னுடைய பிள்ளை நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று வாஞ்சையாக இருக்கும் பெற்றோர் எத்தனை பேர்? பரலோகத்திற்குரிய மேலானவைகளை என்னுடைய பிள்ளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற மன விருப்பத்தோடு, தேவனை வேண்டிக் கொள்ளும் பெற்றோர்கள் எத்தனை பேர்? நாம் அழியாமையை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே நம்மைக் குறித்த பிதாவாகிய தேவனுடைய சித்தமாயிருக் கின்றது. நாம் இந்தப் பூமியிலே பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு, நம்மை தாயின் கருவினிலே பிரித்தெடுத்தார். அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். விசுவாச மார்க்கத்தராகிய பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் கல்வி, தொழில் முன்னேற்றத்திற்காக வாஞ்சையோடு உபவாசித்து ஜெபிக்கின்றார்கள். அதைவிட மேன்மையாக எங்களுடைய பிள்ளைகள், பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சாயலிலே வளர வேண்டும். பிதாவின் சித்தத்தை செய்ய வேண்டும். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையுள்ளவர்களாக அவர்களை வழிநடத்தி செல்லக் கடவோம்.

**எபேசியர் 1:4**

அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,

**ஜெபம்**: உமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு நம்மை பிரித்தெடுத்த தேவனே, உம்முடைய அநாதி தீர்மானம் என்னில் நிறைவேறும்படி நான் வாஞ்சிக்கின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.